# குமரன்

37



மூலதனம் என்றால் என்ன?
புரட்சிகர கலை, இலக்கியம்
கச்சதீவு — கற்பாறையல்ல
வர்க்க நீதியின் வரலாறு
அம்மாவுக்கு ஒரு கடிதம்
நண்பர்களும் எதிரிகளும்
டட்லியின் நினைவாக
கூட்டங்கள்
குற்றவாளிகள்
நமது பிரச்சனைகள் பற்றி ஆராய்வோம்
திருகோணமலையில் வெடித்த தீப்பொறி

ஜூலை 15, 1974
விலை : 50 சதம்

# இலக்கிய உலகில்.....!

— ஆனந்தி —

இலங்கையில் இதுவரை வெளிவந்த நாவல்களில் வாடைக் காற்று நவீனம்போல வேறு எந்த நாவலும் விமர்சிக்கப்படவில்லை. இவ் விமர்சனத்தில் உள்ள புதுமை என்னவெனில் நெடுந்தீவு மீனவ மக்களின் வாழ்க்கையை மையமாகக்கொண்டு எழுதப்பட்டதாகக் கூறப்படும் இந்நாவலை நெடுந்தீவு மீனவ மக்களே காரசாரமாக விவாதிக்க முன்வந்ததாகும். இவ்விமர்சனத்தில் நெடுந்தீவு புத்திஜீவிகளும் எழுத்தாளரும் கூட கலந்துகொண்டனர். இந்நாவல் குமரன் இதழிலும் (35) விமர்சிக்கப்பட்டது. அதையொட்டி நெடுந்தீவிலிருந்தே பல கடிதங்கள் வந்தன. இதுதவிர நெடுந்தீவு கலாச்சாரக்குழு, முற்போக்கு வாலிப இயக்கத்தினர் நாவலை விமர்சித்து துண்டுப்பிரசுரமே வெளியிட்டுள்ளனர். அவ்வெளியீட்டில் ''நெடுந்தீவு மீனவர் வாழ்க்கையை எந்த ஒரு அம்சத்திலும் பிரதிபலிக்காத இந்நவீனத்தை நெடுந்தீவு மீனவர்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக்கொண்டு எழுதப்பட்ட நவீனம் என்று பச்சைப்பொய்யில் பதிப்புரை எழுதியிருப்பதுடன் அதே பச்சைப்பொய்யில் விளம்பரமும் செய்கிறார்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு 'தொழிலாளரைப் பண்பற்றவர்களாகவும் முரடர்களாகவும் காட்டி' எழுதப்பட்டிருப்பதையும் கண்டித்துள்ளனர். இனிமேல் குறிப்பிட்ட ஒரு பகுதி மக்களின் வாழ்க்கையைவைத்து யதார்த்தமாக எழுத முனையும் எழுத்தாளர் விழிப்பாக இருக்கவேண்டும். அல்லது 'யாவும் கற்பனையே' என்ற சொற்றொடரில் முழுகிவிடவேண்டும்.

× × ×

அகில இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரால் விரையில் நடாத்தப்படவிருக்கும் ஒருமைப்பாடு மகாநாடு நாடெங்கும் ழுத்தாளரிடை விழிப்புணர்வை ஏற்படுத்திவருகிறது ஆங்காங்கே இம்மகாநாட்டிற்காக நடைபெறும் ஆரம்ப கூட்டங்களில் ஆபத்தான அரசியல் எழுத்தாளர் என்று கூறப்படுவோர் ஒதுக்சப்படுகின்றனர். அண்மையில் கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் காரசாரமாக அரயல் கருத்துக்களும் விமர்சிக்கப்பட்டன. தமிழரசார், நாம் இதுவரைகாலமும் கத்தினோமே இப்பொழுதாவது முற்போக்கு எழுத்தார், 'இதுவரைகாலமும் ஒருமைப்பாடு நிலவவில்லை. அது அவசியம் ன்பதை உணர்ந்துகொண்டனரே'' என்று நக்கலாகப் பேசுகின்றனர். கில உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டின்போதே இம்மகாநாடுபற்றி றிவிக்கப்பட்டது. ஈழத்து பிரபல தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் ரட்சிகர அணியைச் சேர்ந்தவர்களே. இவர்கள் என்றுமே ஒரு



மைப்பாட்டை முன்வைத்தே கலை, இலக்கியம் படைத்தனர். இக் கருத்தை கலாநிதி க. கைலாசபதி அமைச்சர் ரி. பி. இலங்கரத்தினு அவர்களின் 'இணைபிரியாத் தோழர்' என்ற நாவல் வெளியீட்டின் போது அழுத்தந்திருத்தமாகக் கூறியிருந்தார். (குமரன் 33 பக்: 23)

× × ×

எம் நாட்டில் நிலவும் தேசிய உணர்வை அவரவரின் வாய்ப் பேச்சிலிருந்தல்ல செயல்களிலிருந்தே நாம் கணிக்கவேண்டும் வாய்ப் பேச்சில் மட்டும் தேசியம் பேசி அரசியல் ஆதிக்கமும் பெற்றவர்கள் கூட பிரபல இடங்களில் வேண்டுமென்றே ஈழத்து எழுத்தாளர்களை ஒதுக்கிவிடுகின்றனர். பல்கலைக்கழகத்தில், பாடசாலைகளில் ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்க நூல்கள் இன்றும் நுழையவில்லை. அங்கு இடம்பெற முதலில் எழுத்தாளன் சாகவேண்டும். உயிரோடு உள்ள எழுத்தாளராயின் அவரா, இவரா என்ற குழப்பம் ஏற்படும் என்ற அச்சமும் ஒருவிதக் காரணமாகும். இவ்வெண்ணம் ஒருவித நசிவுப் போக்கும் பிரச்சினையிலிருந்து எளிதில் தப்பிவிடும் மனோபாவமும் மட்டுமல்ல துணிச்சலற்ற கோழைத்தனமுமாகும். இவர்களது தேசிய உணர்வு வெறும் வாய்ப்பேச்சே.

இதே நிலையிலேயே இலங்கை வானொலி தமிழ் பகுதியும் செயல்படுகிறது. ''என்னைக் கவர்ந்த எழுத்தாளர்'' என்ற தொடரில் எங்கோ மூலையிலுள்ள மூன்றாந்தர எழுத்தாளர்களைப்பற்றிக்கூட மூன்றாந்தரமான வாசகர்கள் படிப்பதை யாவரும் கேட்டுச் சகித்திருக்கலாம். ஈழத்து எழுத்தாளரின் படைப்புகள் எம் நாட்டில் எவரையுமே இன்னும் கவர்ந்துவிடவில்லை! கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் படிப்பவர்கள் ஈழத்தில் தரமான எழுத்தாளர் எவரும் இல்லை என்று வழமையாகக் கூறுவதுபோலவே இலங்கை வானொலியும் கூறுகிறது. முன்னர் ஒருகாலத்தில் இலங்கை வானொலி கூறியதையே இன்று தேசியம் வளர்ந்திருப்பதாகக்கொள்வோரும் கூறுகின்றனர், மன்னிக்கவும், தம் செயலில் காட்டுகின்றனர்.

## படை கூட்டுவோம்!

... வரதபாக்கியான் ...

தம்பியே! இளம் தங்கையே! தோழரே!
தன்னைபாட்டிலெம், துன்பங்கள் தீருமென்(று)
இங்கு யாருமே, கூறிடில் அன்னவர்
இருக்கவேண்டிய. இடம் விசர் மாற்றிடும்
அங்கொடை எனும் ஊரிலாம், ஆதலால்
அவர் சொல்லும் விசர்ப், பேச்சினை விட்டுமே
பொங்கியே படை, கூட்டுவோம் நாளையே
புதியதானதோர், உலகினைச் செய்குவோம்.

அச்சுக்கலையில்
ஐம்பது ஆண்டுகள்
அனுபவம் பெற்றோர்

★ அழகான
★ அவசர
★ வர்ண

அச்சுவேலைகளுக்கு
எம்முடன் உடனே தொடர்புகொள்ளுங்கள் !

குமரன் அச்சகம்
201, டாம் வீதி :: கொழும்பு-12.
தொலைபேசி : 21388



## கனவு பலிக்கும்

... முகில்வாணன் ...

கற்பனையில் கண்ணயர்ந்தேன் தோழா – புதுக்
கனவொன்று நான்கண்டேன் தோழா
அற்புதமாய் இருந்ததடா தோழா – அதை
அழகுறவே கூறிடுவேன் கேளாய்

சிவப்பு விளக்கெரியக் கண்டேன் – புது
செவ்வந்தி மலர் விரியக் கண்டேன்
துவக்கு எடுத்தவரைக் கூட – உழவர்
துரத்தி அடித்திடவும் கண்டேன்

நாடாண்ட கூட்டங்களைத் தோழா – நாங்கள்
காடாள கலப்பை பிடிக்க வைத்தோம்
சேட்டை விட்டவர்க்குக் கூட – நாங்கள்
சிட்டைக் கிழித்திடவும் கண்டேன்

கனவு பலிக்குமடா தோழா – புதுக்
காலம் பிறக்குமடா தோழா
செங்கொடி பறக்குமடா தோழா – இன்று
சேரணி அமைப்போமடா தோழா.

இழப்பதற் கேதும்
இல்லாத மூதேவிகள்
என்று பழிக்கப் படுகிறோம்
ஆனால் வெல்வதற்கு இந்த
உலக முண்டு எங்களுக்கு !

* * *

பள்ளம் உயர்த்த
வன்ன செய்வ தென்று
யோசிக்க வேண்டாம்
சமரசம் செய்யப்
பாலம் அமைக்க வேண்டாம்
மேட்டை அழிக்கப்
பள்ளம் சமநிலமாகும்.

— மு. ராஜ்கபூர்

### என் கவிகள்

கன்னல் மொழி
கதலிப் பூ நிறம்
மின்னல் இடை
மிளுங்கும் நடை
இன்னும் பல
இடையில் தெரியுமென்று
வண்ணக் கவிபாடும்
வாலிபனல்ல நான் – என்
எண்ணம் பொருள் – செயல்
எல்லாம் – ஏழைகள் –
தொழிலாளிகள் – விவசாயிகள்
துயர் துடைக்கப் பாடுபடும்.

– மாதுங்கன் –

# குற்றவாளிகள்

'ராமன்'

"புதுத் தெருவில் காட்டை வெட்டி நிலத்தைத் திருத்தினாய்"

"ஆமா"

"அதிலே ஒரு குடிசை போட்டு மனைவி பிள்ளைகளோடு வாழ்ந்தாய்"

"ஆமா"

"அந்த நிலத்திலே உளுந்தும், பயறும், குரக்கனும் பயிரிட்டாய்."

"ஆமா."

"காடு திருத்தியது யார்?"

"தானே! மூண்டு வருஷமா உழைச்சேனுங்க."

"டி. ஆர். ஓ. உன்னை நிலத்தை விட்டு எழும்படி பல தடவை எச்சரித்தார்."

"ஆமா."

"நீ ஏன் எழும்பவில்லை?"

"அது என் நிலமுங்க. நான் காடு வெட்டித் திருத்திய நிலமுங்க."

"உன் நிலமெண்டால் உறுதி உன்னிடம் இருக்கிறதா?"

"ஏனுங்க உறுதி. நான்தானே அந்தப் பாழ் நிலத்தைத் திருத்தி அங்கேயே குடியிருக்கிறேனே."

"அது முடிக்குரிய நிலம் — அரசாங்கத்திற்குரிய நிலம் என்று உனக்குத் தெரியாதா?"

"அரசாங்கத்திற்குரிய நிலத்தை பயிரிட்டால் எவரும் கேட்கமாட்டார்கள் என்ற துணிச்சலோடுதான் காடு வெட்டத் தொடங்கினேன்."

"நிலத்திற்குப் பாதுகாவலாக அரசாங்க அதிகாரிகள் இருப்பது தெரியாதா?"

"அதிகாரியென்று எங்க டி. ஆர். ஓ. வைச் சொல்லுறீங்களா? அது அவருடைய நிலமில்லையே!"

"அப்ப யாருடைய நிலமென்று சொல்லுகிறாய்?"



"அது என் நிலமுங்க."

"உறுதியில்லாமல் எப்படி உன் நிலமாகும்?"

"அப்பிடி ஒன்று தேவையென்றால் எழுதிக் கொடுங்க. பிரச்சனை தீர்ந்துவிடும்."

"எழுதிக் கொடுப்பதாவது. நீ அந்த நிலத்திலையிருந்து எழும்பி விட வேணும்."

"அது எப்படி முடியுமுங்ச, நான் அந்த நிலத்திலேயே வசிக்கிறேன். நாட்டிலை பஞ்சம். உணவுப்பொருட்கள் பயிரிடவேணுமென்று டி. ஆர். ஓவே கூட்டம் நடத்தினார். நாங்க அதுக்காகவே உழைச்சம். இப்ப வேண்டாம், எழும்புங்க என்கிறார் இது பிழையாகத்தான் எனக்குத் தெரியுது".

"சட்டப்படி நீ செய்தது குற்றம். முடிக்குரிய காணியை நீயாகவே காடுவெட்டித் திருத்திக் குடியேறியது சட்டப்படி குற்றம்"

"சட்டத்தை திருத்திவிட முடியாதாங்க"

"உன் வசதிக்காகவா?"

"என்னைப்போல ரொம்பப்பேர் இருக்கிறாங்க"

"சரி, நீ இறங்கிப்போகலாம்"

முருகையா சாவதானமாக சாட்சிக் கூட்டிலிருந்து இறங்கி நடந்தான்.

"இவன் வெறும் அப்பாவியாக இருக்கிறான். அவன் சட்டத்தை மதிப்பவனாகவும் தெரியவில்லை".

விசாரணை நடத்திய புரொக்டர்கூறினார்.

"டி. ஆர். ஓ. இந்த நிலத்தை பறித்து என்னசெய்வார்? வேறொருவருக்குக் கொடுப்பார். அப்படித்தானே?"

"யெஸ்"

"அப்படியானால் ஏன் இவனுக்கே கொடுத்துவிடப்படாது".

"இவன் இந்தநாட்டுப் பிரஜையல்ல"

அவனது பதில்களையும் தோற்றத்தையும் கொண்டு நீதிபதியால் அவனைக் கணிக்கமுடியவில்லை.

நீதிபதி தீர்ப்பை ஒத்திவைத்துவிட்டு அடுத்த வழக்கை எடுத்தார்.

நண்பகல் உணவிற்காக வீடு திரும்பும்போது அவர் வீட்டில் நாய் போல நன்றியோடு உழைக்கும் மாரப்பனின் நினைவுவந்தது. அவனது பிரஜா உரிமைபற்றி அவர் என்றும் விசாரித்ததில்லை. மனைவியாரின் ஆட்சியில் மாதம் 40 ரூபாவிற்காக அவன் மாடாக உழைக்கிறான்.

எல்லோர் வீடுகளிலும் அவன்போன்ற வேலைக்காரர் பரவிவருவதை அவர் அறியாமலில்லை. எல்லோரும் குற்றம் புரிகிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதே சட்டப்படி குற்றம். குறைந்த ஊதியம் கொடுப்பதும் சட்டப்படி குற்றம். ஆனாலும் வசதி கிட்டும்போதெல்லாம் தண்டிக்கப்படுபவர்கள் அவர்களே. அவர்கள் உழைக்கமட்டும் பிறந்தவர்கள். அதிகாரம் எங்கள் கையில் உள்ளது. பிரஜா உரிமைச்சட்டம் அவர்களையெல்லாம் அடிமைகளாக்கிவிட்டது. அவர்களது உழைப்பை நாம் மலிவாக வாங்க முடிகிறது. சிந்தனை நீதியைத்தேடி அலைந்த போதும் முருகையாவின் தோற்றமும் பதில்களும் அவர் மனதை வட்டமிட்டன. வீட்டு வாசலில் காரை நிறுத்தியதும் மாரப்பன் ஓடி வந்து காரின் கதவைத் திறந்துவிட்டான். அவரது பைல் கட்டுகளை எடுத்துச்சென்றான்.

''இவனை இந்த வீட்டில் இனிமேல் வைத்திருக்க முடியாது''

வீட்டில் படியேறியதும் மனைவி அழாக்குறையாகச் சொன்னாள்.

''ஏன், என்ன நடந்தது?''

''அவன் என்னை எதிர்த்துப் பேசுகிறான்''

''அதுக்காகமட்டுமா?''

''அவன் கூடாத கூட்டம் கூடித்திரிகிறான்''

''அது என்ன கூட்டம்!''

''ஏதோ புரட்சிக்கூட்டமாம். மாமனைப்பார்க்க சுண்டிக்குளம் போவதாகக் கூறிக்கொண்டு இரவெல்லாம் காட்டில் கூட்டத்திற்குப் போயிருக்கிறான். ஒருத்தரும் நிலத்தைவிட்டு எழும்புவதில்லை என்று தீர்மானம் எடுத்திருக்கிறாங்களாம். அதிகாரிகள் ஆதிக்கம்செலுத்தினால் கொலையும் செய்துவிடுவாங்களாம். இவனை உடனே கலைத்துவிடப் போகிறேன்''

''உனக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது''

'இவன் மார்க்கெட்டுக்குப் போயிருக்கும்போது வேறொருவன் வந்து சொல்லிவிட்டுப்போனான்''.

''மாரப்பா இங்கே வா. உன் மாமனைப்போய் அன்றைக்குப் பார்த்தியா''

நீதிபதி மாரப்பனை அழைத்துக் கேட்டார்.

''ஆமா''

''உன் மாமன் பெயரென்ன?''

''முருகையா''. +

'அப்பு' விஞ்ஞான இதழ் படிக்கிறீர்களா?



# சமுதாய மாற்றத்தில் புரட்சிகர கலை, இலக்கியம்

★ செ. கணேசலிங்கன் ★

கலை, இலக்கியங்கள் யாவும் (Superstructure என்று கூறப்படும்) மேல்மட்ட அமைப்பைச் சார்ந்தவையாகும். இவை என்றும் அடிப்படை அமைப்பான பொருளாதார அமைப்புக்குச் சேவை செய்வதாகவே அமையும். வர்க்க சமுதாயம் தோன்றிய காலத்திலிருந்து ஆளும் வர்க்க நலன் பேணும் கலை இலக்கியங்களே சமூக அந்தஸ்துப் பெற்று வளர்க்கப்பட்டு வந்ததை நாம் எளிதில் அறிந்து கொள்ளலாம். நிலவுடைமைக் காலத்தில் மன்னர்கள், நிலப் பிரபுக்களை வைத்தே காவியங்கள் படைக்கப்பட்டன. கைத்தொழிற் புரட்சியின் பின் மூலதனம் ஆதிக்கம் பெறத் தொடங்கியதும் கலை, இலக்கியத்திலும் புரட்சி ஏற்படவே செய்தது. தனி மனித வாழ்வைப் பிரதிபலிக்கும் சிறு கதை, நாவல் போன்ற புதிய இலக்கிய உருவங்கள் தோன்றின. இப்புதிய உருவங்களும் வர்க்க நலன் பேணு

23-6-74 அன்று திருகோணமலையில் நடந்த கலைஞர், எழுத்தாளர் மகாநாட்டின்போது படிக்கப்பட்ட கட்டுரைச் சுருக்கம்.

பவையாகவே படைக்கப்பட்டன. எவற்றையும் லாபகரமான கைத்தொழிலாக்கும் சிறப்பு முதலாளித்துவத்திற்கே உரியதாகும். முதலாளித்துவ சமூக அமைப்பில் கலை உருவங்கள் யாவும் மலினப்படுத்தப்பட்டு விற்பனைப் பண்டங்களாகின. இவற்றைப் படைப்பவர்கள் கூட தமது உழைப்பை விற்கும் கூலிகளாயினர். ஆதியில் மனித சுதந்திரத்தின் கீதமாக இருந்த கலை, இலக்கியங்கள் அவற்றின் சுதந்திரத்தை இழந்தன. மனிதனது சுதந்திரமான அக நிலையை புற நிலைகள் பாதித்தன. விற்பனைப் பண்டமாக, ஆதிக்கம் பெற்ற வர்க்க சமுதாயத்தை நிலை நிறுத்தும் உள் நோக்குடனேயே கலை, இலக்கியங்கள் வளர்க்கப்பட்டன.

இன்றைய சமுதாய அமைப்பை நாம் முதலில் விவாதித்து முடிவு செய்து கொள்ள வேண்டும். இன்றைய சமுதாயம் வர்க்க சமுதாயம் என்பது உறுதியானதே. ஆயினும் அதன் வளர்ச்சியில் எத்தகைய கால கட்டத்தை அடைந்துள்ளோம்? எமது பொருளாதார அமைப்பைக் கொண்டே இதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். நிலவுடைமையாளர், தொழிலதிபர்கள், ஏற்றுமதி இறக்குமதி வர்த்

தக முதலாளிகள், பொதுப் பணத்தை மூலதனமாக்கி ஆளும் அதிகாரிகள், முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து மூலதனங்களை வட்டியில் வரவழைத்து லாபத்தில் பங்கு போடும் தரகு முதலாளிகள், பேச்சில் சோஷலிசமும் செயலில் ஏகாதிபத்தியமுமாக நிற்கும் சமூக ஏகாதிபத்தியம் ஆகியோரே ஆளும் வர்க்கத்தைச் சார்ந்து நிற்கின்றனர்.

இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட முரண்பாடுகள் தோன்றும்போது நாம் அவற்றின் தீர்க்கமான பாத்திரத்தை வகிக்கும் பிரதான முரண்பாட்டைக் கண்டுபிடிக்க வேண்டும். நான்கு முரண்பாடு உண்டெனில் நாசம் 25% போட்டு சமனாக்க முடியாது. ஏதோ ஒரு முரண்பாடு இவற்றில் முன்னோடியாகவே நிற்கும். அதுவே பிரதான முரண்பாடாகும். அங்கிருந்தே புரட்சி ஆரம்பிக்கப்பட வேண்டும். நினைவு பூர்வமாகச் செயலாற்றாவிடினும் புரட்சி அங்கிருந்தே ஆரம்பிக்கும். அம்முரண்பாட்டில் தொட்டதும் மற்றைய முரண்பாடுகன் தாமே வந்து மோதும். வியத்நாமில் ஆரம்பிக்கப்பட்ட விவசாயிகளின் புரட்சியை எதிர்க்க அமெரிக்க ஏகாதிபத்தியமே வந்தது. சீனாவிலும் விவசாயிகளின் புரட்சியை எதிர்க்க ஏகாதிபத்தியங்கள் வந்ததை யாவரும் அறிவர்.

முன் குறிப்பிட்ட பொருளாதார அமைப்புக்கொண்ட சமுதாயத்தில் படைக்கப்படும் கலை, இலக்கியங்கள் இதே வர்க்கநலன் பேணுபவையாகவே அமையும். ஆங்கிலம் இந்நாட்டில் மீண்டும் ஆதிக்கம் பெறுவது தரகு முதலாளித்துவ வளர்ச்சியையே காட்டிநிற்கிறது. இலங்கை வானொலியும் பெரும்பாலான பத்திரிகைகளும் அரச முதலாளித்துவ நலன் பேணுகின்றன.

இலக்கியம் என்ற மேல்மட்ட அமைப்பை எடுக்கும்போது கவிதை, சிறு கதை, நாவல், எழுதப்பட்ட நாடகம், கட்டுரை, வசன கவிதை ஆகிய கலை உருவங்களையே நாம் கருதுகிறோம். இக்கலை உருவங்கள் அனைத்தும் நிலவுடைமை, முதலாளித்துவத்தால் பெற்றெடுக்கப்பட்ட கலை உருவங்கள் என்பதை நாம் மறந்துவிடப்படாது. அவை அத்தகைய சமுதாய அமைப்பை நிலை நாட்டுவதற்காகவே எழுந்தன.

முன்னர் குறிப்பிட்டதுபோல ஒவ்வொரு சமுதாய அமைப்பும் அதன் தேவையை ஒட்டிய கலைஉருவங்களைத் தோற்றுவிக்கின்றன. கைத்தொழிலதிபர்கள் நிலவுடைமை உடைத்தெறிந்த புரட்சியின் பின்னரே சிறுகதை, நாவல் என்ற கலை உருவங்கள் தோன்றி ஆதிக்கம் பெற்றன என்று முன்னரும் குறிப்பிட்டேன்.

சமுதாய மாற்றம் என்பது சீர்திருத்தம் என்பதல்ல. பலர் சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்காகவே கலை, இலக்கியங்களைப் படைப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இம்முயற்சி பழைய வீட்டுக்கு 'றிப்பெயர்' செய்வதுபோன்றதாகும். இம்முயற்சிகள் எவ்வித பலனையும் தரப்போவதில்லை. நாம் இன்று வேண்டுவது சமுதாயத்தை முற்றாக மாற்றியமைக்கும் முயற்சியாகும், அதாவது இன்றைய வர்க்க சமுதாயம் முற்றாக உடைக்கப்பட்டு வர்க்கமற்ற புதிய சமுதாயத்தை, பாடுபட்டுழைக்கும் தொழிலாள, விவசாயிகள் ஆதிக்கம் பெற்ற சமுதாயத்தை அமைப்பதாகும். இத்துறையில் புதிய, புரட்சிகர இலக்கியத்தின் பங்கு என்ன என்பதே எமது வினாவாகும். ஒரு சமுதாயம் அழிந்துகொண்டிருக்கிறது. புதிய மற்றோர் சமுதாயம் தோன்றப்போவது தவிர்க்கமுடியாத வரலாற்று நியதியாகும். ஆகவே இப்பிரசவகாலத்தின் உந்து சக்தியாக விளங்கவேண்டிய பொறுப்பின் ஒரு பகுதிகளே இலக்கியத்தைச் சார்ந்ததாகும். இப்போராட்டத்தில் நாம் நிலவுடைமை' முதலாளித்துவம் பெற்றுத்தந்த கலை உருவங்களையே ஆயுதங்களாகப் பயன்படுத்தப்போகின்றோம்.

கலை உருவங்களின் நோக்கம் இன்பம் தருவது, அறிவு தருவது என்பதே முதலாளித்துவத்தின் கோட்பாடாகும். கீழ்தர இன்பங்களையும் தம் வர்க்க நலன்பேணும் அறிவையுமே அவர்கள் கருதுகின்றனர். புரட்சிவேண்டிநிற்கும் நாமோ விலங்கறுபட்ட சுதந்திரத்தால் கிட்டும் இன்பத்தையும் எதிர்காலத்தில் எல்லோரும் எல்லாம் பெறும் சமநீதி வழங்கும் இன்பத்தையுமே கருதுகிறோம். அறிவு என்று இத்தகைய சோஷலிச சமுதாய அமைப்புக்கு வழிகாட்டும் சரியான அறிவையே கருதுகிறோம். அதுவே மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், மாவோ ஆகிய உலகப் பேரறிஞர்கள் விஞ்ஞான ரீதியாக, தர்க்கவாத அறிவாலும் செயலாலும் நிரூபித்துக்காட்டிய அறிவாகும். இவ்வறிவு வர்க்கப் போராட்டத்தையும் இயக்கவியல், பொருள் முதல்வாதத்தையும் அடிப்படையாகக்கொண்டது. கலையின் நோக்கம் இன்பம், சரியான அறிவு ஆகியவற்றிற்கு மேலாக செயலூக்கமும் தரவேண்டும் என்பதே புரட்சிகர கலை, இலக்கியத்தின் சித்தாந்தமாகும்.

சமுதாயப் புரட்சியும் பாட்டாளியின் விடுதலையும் நசிந்த இவ்வர்க்கத்தின் சர்வாதிகாரமும் வேண்டிநிற்கும் எழுத்தாளரின் படைப்புகளில் சரியான மார்க்ஸிச அறிவும் புரட்சிநோக்கும் செயலூக்கமும் சிறந்த கலை அமைப்பால், உருவத்தால் தரக்கூடிய இன்ப உணர்வும் உள்ளதா என்று ஆராய்வதன்மூலம் எளிதில் புரட்சிகர இலக்கியம் படைக்கும் எழுத்தாளரை இனம் கண்டு கொள்ளலாம். இப்போக்கில் நமது எழுத்தாளர்கள் இன்றைய காலகட்டத்தின் அரசியலை நன்டு விவாதித்து உணர்ந்துகொள்ளவேண்டும். புரட்சியின் காலகட்டம் என்ன? நாம் உடனடியாகவேண்டும் சமுதாய அமைப்பு எத்தகையது? அதன் சுலோகங்கள் எவை? என்பதையும் அறிந்து

கொள்ளவேண்டும். கம்யூனிசம் நோக்கிய புரட்சி பல காலகட்டங்களைக் கொண்டது. புரட்சி என்பது பண்ட உற்பத்தி அமைப்பில் மாற்றம் ஏற்படுத்துவதாகும். இன்று நிலவுடைமையாளர், முதலாளிகள், அரசு அதிகாரிகளின் ஆதிக்கத்திலுள்ள உற்பத்திச் சாதனங்களை தொழிலாள, விவசாயிகள் தமது ஆதிக்கத்தில் கொண்டுவருவதே நாம் வேண்டும் புரட்சியின் முதல் காலகட்டமாகும்.

பூஷ்வா ஜனநாயகம் உடைக்கப்பட்டு மக்கள் ஜனநாயக உரிமை பெறுவது முதற்கட்டமாகும். இப்புதிய புரட்சியை புதிய ஜனநாயகப் புரட்சி என்று கூறுகிறோம். உழுபவனுக்கே நிலம், குடி இருப்பவனுக்கே வீடு, தொழிலாளருக்கே தொழிற்சாலைகள், சொத்துகள் அனைத்தும் மக்களின் சொந்தம் என்று குரல் எழுப்புவோம். ஆயுதங்களை ஏந்தி சொத்துகளைப் பறித்துவிடலாம். அதை நியாயப்படுத்த மக்களின் சிந்தனையைப் பறிப்பது தனியான பணியாகும். பல்லாயிரம் வருடங்களாக பரம்பரை பரம்பரையாக திசைதிருப்பப்பட்ட சிந்தனையோடு வளர்க்கப்பட்ட மக்களின் சிந்தனையை வென்றெடுப்பது அத்தனை எளிதல்ல. சீனாவில் ஆயுதப்புரட்சி முடிந்த 18 ஆண்டுகளுள் மக்கள் சிந்தனையைக் கைப்பற்ற கலாசாரப் புரட்சி ஒன்றையே நடாத்த நேரிட்டது யாவரும் அறிந்த உண்மையாகும். ஆகவே எமது எழுத்தாளரின் பணி பன்முகப்பட்டதாகும். புரட்சிகர அரசியலைக் கிரகித்துக்கொள்வது, அதைப் பரப்புவது, சமூக நீதியை நியாயப்படுத்துவது, எதிர் சக்திகளுடன் போரிடுவது ஆகிய பல பணிகள் எம் புரட்சிகர எழுத்தாளர் முன் உள்ளன.

லாபகரமான வாணிப முறையில் பெருங் கைத்தொழிலாக கலை, இலக்கியங்கள் பரப்பப்படும் சூழலில் சமுதாயப் புரட்சிவேண்டும் புரட்சிகர எழுத்தாளர்கள் தமது பணியைச் செய்யப்புகுவது எளிதல்ல. மக்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய சாதனங்கள் மிகக் குறைவு, அதேவேளையில் அரசு ஆதிக்கம்பெற்ற எதிர் சக்திகள் எம் சிறு முயற்சிகளைக்கூட முறியடிக்கவும் முயல்வர். வெளியீட்டுச் சாதனங்கள் இல்லை என்ற குறை சமுதாய மாற்றத்திற்காக உழைக்கும் எழுத்தாளரிடை என்றும் இருக்கப்படாது. ஆகவே சமுதாயப்புரட்சி வேண்டி இலக்கியம் படைக்கும் எழுத்தாளர், பாட்டாளி வர்க்கத்தின் நலம்பேணும் படைப்பாளர், மூன்று வகையாகச் செயல்படலாம்: ஒன்று, இன்று முதலாளிகளின் கையிலுள்ள அச்சு வசதியை முடிந்தவரை பயன்படுத்தி கலை இலக்கியம் படைத்து புத்திஜீவிகள், பாட்டாளிகளிடை பரப்புவது. இரண்டாவது இயக்கத்தவரிடை பரப்புவதற்காக கையெழுத்துப் பிரதிகள், பிற சாதனங்கள்மூலம் தொடர்புகொள்வது, மூன்றுவது நேரடியாகக்கூடி கலை, இலக்கியங்களைப் படித்து, பாடி, விமர்சிப்பது ஆகியவையாகும். ●



## அம்மாவிற்கு ஓர் கடிதம்

பத்து மாதம் இவனை இந்த வயிற்றில் சுமந்து
பத்தியங்கள் பல பார்த்து பெற்றெடுத்த தாய் நான்
சீராட்டி, நீராட்டி, சிறு தொட்டிலிட்டு
என்னைப் பசி கிடத்தி கண்ணென்று எண்ணி
பாலூட்டி, தாலாட்டி, பாட்டுக்கள் பாடி
பவுத்திரங்கள் பல பார்த்து..., நித்திரை யிழந்து
அடுப்படிப் புகை குடித்து ஆளாக்கி விட்டதற்கு,
அன்னை யெனக்கு இவன் செய்ததென்ன தம்பி
இன்றுமிவன் என்னை வந்து பார்த்த துண்டோ – இவன்
என்னை விட்டுச் சென்றதென்ன இன்று நேற்றோ
ஒன்றரை வருடமல்லோ – என்னதான் இருந்தாலும்
அன்னையில் இல்லாப் பற்று அவனுக் கந்த
சிவப்புக் கட்சியிலுண்டு தம்பி.

வந்தவன் வீட்டிற்கு என்னணித் தோழனிடம்
உன் இதய வில்லை வளைத்து நீ
விட்ட இக் கணைகள் உன்னுசை மேலீட்டை
உணர்த்தலாம் அத் தோழனுக்கு – என் அம்மா!
என்னைப் பிறப்பித்த பெண்ணுருவே
உன்னைப் புரிவதற்கு உன் உதிரப் பிறப்பிற்கு
இன்னொருவன் தோழன் இதயத் தூடாக
இந்தளவு நீ சொல்லத் தேவையில்லை தாயே
உன் பொக்குள் கொடியில் பூத்த
இந்த அக்கினிப் பூவிற்கு.

இப்பொழுது நான் இங்கே நீ ஊட்டிய
உதிரத்தை வேர்வையாய் உருவாக்கி
இக் களத்து மக்களுடன் ஒன்றுகி
உக்ரமடைந்து வரும் வர்க்க
எதிரிக்கு எதிரான போராட்டத்தின்
உச்ச கட்டத்தை எதிர் நோக்கி
நிற்கின்றேன். எதிர் வரும் பத்தில்
தம்பியின் சம்பளம் எடுத்து எனக்கு
மெத்தப் பிடித்த ஒடியல் பிட்டவித்து
வைத்திருப்பதாக சொன்ன சேதியை
இப் பொழுதே அத்தோழன் என்னிடம் சொன்னான்.
பத்து மாதம் என்னைச் சுமந்து பெற்ற
பிள்ளைப் பால் பித்தே உன்
மூத்த புதல்வனிடம் நீ காட்டும் அன்பிற்கு
உன்னைப் பிரிந்து நான் ஒரு கணமும் வாழ
எண்ணித் துணியவில்லை நடந்த தெல்லாம்
உன்னைப் பிடித்திருந்த சொல்லொணுக்
கொடுமைகளை இல்லாமல் செய்ய
என்ன வழியென்று எழுந்திட்ட கேள்வியினுல்
சமூகத்தில் உள்ள நிலமைகளை உணரத் தலைப்பட்டேன்
அவ்வேலை உள்ள உன் துயரெல்லாம்
என் தாய்க்கு மட்டுமில்லை இன் நிலத்தில்
இல்லாமை என்கின்ற இருட்டுக்குள் கிடக்கின்ற
எல்லாத் தாய்க்கும் உள்ள பொது நிலமை
என்று நான் அறிந்ததினுல், என்னைச் சிவப்பாக்கி
எதிர் காலத்தில் என்னைப்போல் பிள்ளையும்
உன்னைப்போல் தாயும் இல்லாமை என்கின்ற
இருட்டறைக்குள் கிடந்து பொல்லாத துயர்
பட வேண்டாம் என்றுதான் உன் முந்தானைச்
சீலைக்குள் என் முகத்தைப் புதைத் துறங்கும் அன்பை
பிரிந்து, இந்நாளில் இக் கணத்தில் தினமும்
வர்க்கப் போருக்காய் நின்றுழைக் கின்றேன்.

இக் கணத்தில் இங்கே உக்கிரம் அடைந்துவரும்
வர்க்கப் போராட்டத்தின் உச்ச கட்டத்திற்கு
முகம் கொடுத்து தங்களை அர்ப்பணித்து
நிற்கின்ற மக்களில் ஒருவனாய் நான்
நிலை நிற்கும் இவ் வேளையிலும் உன்
செப்புதலுக்குச் செவி சாய்த்து
என் தாயின் அன்பு முகத்தை அப்படியே அணைத்து
ஆசை தீர முத்தம் கொடுக்க எதிர் வரும்
பத்திற்கு பிறகு உயிருடன் தப்பியிருந்தால்
ஓடோடி வர முயலுகின்றேன். நீ எனக்கு
ஒடியல் பிட்டு அவித்து வைத்திரு; தப்பி
நான் வராது விட்டிருந்தால் உன் மகனின்
வரலாறு இத்தரையில் சிவப்பு இரத்தத்தால்
எழுதப்பட்டிருக்கும் – என் அம்மாவிற்கு என் வணக்கம்.

— சாருமதி

# மூலதனம் என்றால் என்ன?

— தியாகு —

ஒரு நாட்டின் மிகப்பெரிய மூலதனம் அந்நாட்டின் மக்களே. அதற்கடுத்ததாக அந்நாட்டின் இயற்கை வளத்தைக் கூறலாம். நிலத்தைத் தமது சொத்தாகிய நிலவுடைமையாளர் தம்தேவையை, வர்க்கநலனை ஒட்டியே மக்கள் உழைப்பைப் பயன்படுத்தினர். யந்திரப்புரட்சி ஏற்பட்டதும் மனிதன் மூலதனத்திற்கு அடிமைப்பட்டான். இன்றும் ஆளும் வர்க்கத்தவர் உற்பத்தியைப் பெருக்க 'மூலதனம்' வேண்டும் என்று கூக்குரலிடுகின்றனர். மக்கள் அனைவரும் உற்பத்தியில் ஈடுபடமுடியாதபடி உற்பத்திச் சாதனங்களை முதலாளிகளும் நிலவுடைமையாளர்களும் தமது ஆதிக்கத்தில் வைத்துள்ளனர். லாபம் நோக்கிய இவர்களது திட்டமற்ற உற்பத்தி சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளை நிலைக்கவைப்பது வியப்பல்ல.

முதலாளித்துவத்தில் பணமே முதலாக நிற்கிறது. உற்பத்தி யாவும் மக்கள் தேவையை ஒட்டியல்ல—பணத்தை நோக்கியே நடைபெறுகிறது. பாண் வாங்க தொழிலாளிகளிடம் பணமில்லை என்று காணும் பேக்கரிக்காரன் பணமுள்ள பணக்காரருக்காக 'கேக்'கை மட்டும் தயாரிப்பான் என்பது வழமையாகக் கூறப்படும் கதையாகும்.

கிராமத்து விவசாயிக்கு கலப்பை தேவையாக இருக்கிறது. அங்குள்ள கொல்லன் விவசாயியிடம் வட்டி பெற்ற வட்டிக்கடைக்காரனுக்கு இரும்புப்பட்டை செய்வான்; கலப்பை செய்யான். ஏனெனில் விவசாயியிடம் கலப்பைக்காகக் கொடுக்கப் பணமில்லை. இதனால் விவசாயியின் அடுத்த போக உற்பத்தி குறைகிறது. வட்டிக்கடைக்காரனுக்கு வட்டி குறையும். லாபம் குறைய மூலதனம் குறையும். இது தொடரும்போது நிலம், கொல்லன், மக்கள் உழைப்பு யாவும் சும்மா இருக்கும். ஏனெனில் 'மூலதனம்' இல்லை என்பதால்.

தொழிலாளர்களும் விவசாயிகளும் கிராம ஆதிக்கத்தைக் கைப்பற்றினால் உற்பத்திச் சாதனங்களை பயன்படுத்த 'மூலதனம்' வேண்டும் என்ற பேச்சிற்கே இடமில்லை. நிலம், நீர்ப்பாய்ச்சல் வசதிகள், உபகரணங்கள், டிராக்டர்கள் ஆக கிடைக்கக்கூடிய உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் கிராமத்து தொழிலாள, விவசாயிகளது கூட்டுறவுச் சங்கத்தின் நேரடி ஆதிக்கத்தில் வந்துவிடும். தொழிற்சாலைகள், தோட்டங்களின் உற்பத்தியை எவ்வாறு உயர்த்தலாம் என்று அவர்



களே தீர்மானிப்பர் இதேபோன்ற பிற கிராமத்து தொழிற்சாலைகள், தோட்டங்களுடன் கலந்துபேசி மூன்று முக்கிய விஷயங்கள் பற்றி முடிவு செய்வர்:

1) எதை உற்பத்தி செய்ய வேண்டும்.
2) உற்பத்தி எவ்வாறு சீரமைக்கப்படவேண்டும்.
3) உற்பத்திப் பண்டத்தை எவ்வாறு விநியோகிக்கவேண்டும்.

'மூலதனம்' இல்லாததால் நிலம் தரிசாகிக் கிடக்கிறது, தொழிற்சாலையை முழுமையாக பயன்படுத்தமுடியவில்லை என்ற பேச்சுகளுக்கே இடமில்லை. இளைஞர்களின் கல்வி, ஆக்கசக்தி, மக்களது உழைப்பு அனைத்தும் மக்களுக்காகப் பயன்படும். உற்பத்தி பெருகும். மூலதனம் என்பது பணமல்ல, நாட்டின் இயற்கை வளமும் மக்களது உழைப்புமே என்பது நிரூபணமாகும். +

விற்பனையாகின்றன!

மு. இராசசேகரன் எழுதிய

**ஒன்றிணைந்த விஞ்ஞானம்**

**6, 7, 8ம் தரம்**

300 பல்தேர்வு வினாக்கள் விடைகளுடன் கூடியது. ரூ 3/-

S. S. கருணாகரன் B.Sc., எழுதியது.

**புதுக்கணிதம் 7 — பகுதி I**

விலை ரூ. 3/-

**புதுக்கணிதம் 7 — பகுதி II**

விலை ரூ. 3/-

வெளிவந்துவிட்டது !

S. S. கருணாகரன் B. Sc. எழுதிய

**புதுக் கணிதம் 8 — பகுதி I**

விலை: ரூ. 3/-

**விஜயலட்சுமி புத்தகசாலை**

248, காலி வீதி : : வெள்ளவத்தை

கொழும்பு-6.

தொலைபேசி : 88930

# கச்சதீவு வெறும் கற்பாறையல்ல

"கலி"

"இது என் பிள்ளை"

"இல்லை இது என் பிள்ளை"

இரண்டு தாய்மார்கள் ஒரு பிள்ளையை 'தன் பிள்ளை' என்று வாதிட்டார்கள். 'சரி, பாதியாக வெட்டி பெற்றுக்கொள்ளுங்கள்' என்று நீதிபதி உத்தரவிட்டார். 'வேண்டாம், எங்கிருந்தாலும் வாழ்க' என்று பெற்ற தாய் மற்றவளுக்கே பிள்ளையைக் கொடுக்க உடன்பட்டாளாம். இப்படியான ஒரு பிரபல நாடோடிக்கதையுண்டு. கச்சதீவு இவ்வாறு இலங்கைக்குக் கொடுக்கப்பட்டது என்று வாதிட வரவில்லை. அதேவேளையில் இந்திரா 'கச்சதீவு இலங்கையின் பிள்ளை தான்' என்று இரவில் கனவு கண்டுவிட்டு இலங்கைக்கு அன்பளிப்புச் செய்ததாக எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். 'கச்சதீவு ஒரு கற்பாறை' என்று இந்திரா கூறிவிட்டதற்காக தமிழ்நாட்டவர் கூக்குரல் எழுப்பியது இந்திராவின் செவியில் ஏறியிருக்காது என்று எவரும் கூறிவிட முடியாது.

இந்தியா இந்து சமுத்திரத்தில் இன்றோர் பேரரசாக விளங்குகிறது. சமூக ஏகாதிபத்தியத்தின் துணையுடன் வல்லரசாகவும் வளர்ந்து வருகிறது. அண்மையிலே அணுகுண்டு வெடித்து அயல் நாடுகளுக்கும் உலகிற்கும் தன் அணு ஆயுத வளர்ச்சியை அறைகூவியது. அத்தகைய பேரரசு திடீரென கச்சதீவை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியதென்றால் பேரரசுப் புலி பசுவாக மாறிவருகிறது என்று கருதிவிட முடியாது.

சென்ற ஓரிரு மாதங்களுள் நடைபெற்ற சில முக்கிய நிகழ்வுகளின் பின்னணியிலேயே நாம் கச்சதீவு அன்பளிப்பை காணவேண்டும்: (1) இந்திய அணுகுண்டுப் பரிசோதனை 'சமாதானத்திற்காக' என எமது அரசினால் அறிவிக்கப்பட்டது. (2) இந்திய தொழில் நுட்ப தாதுகோஷ்டி இலங்கைக்கு வந்து இலங்கை நீர் மின்சாரத்தை இந்தியாவிற்கு கொண்டுசெல்வதிலிருந்து வேறும் கூட்டு முயற்சிகள் பற்றி இணங்கியது. (3) எமது எண்ணெய் வளத்தில் ரஷ்யா காட்டும் ஆர்வம். (4) விக்கிரமசிங்கா - கெனமன் இணக்கம். (5) அண்மையில் அறிவிக்கப்பட்ட பிரதமரின் கிழக்கு ஐரோப்பிய, ரஷ்ய விஜயம். (6) பிரதமரின் மகள், மருமகனான ரூபசிங்கா தம்பதிகளின் இந்திய விஜயமும், வரவேற்பும். (7) கச்சதீவு அன்பளிப்பை இந்தியாவில் பல கட்சிகள் எதிர்க்கும்போது மொஸ்கோ சார்பான கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்றுள்ளது. (8) இந்திய கடற்படைத் தளபதியின் இலங்கை விஜயம். இவை யாவும் எமது வெளிநாட்டு கொள்கையில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களையே குறிக்கின்றன. ரஷ்யா, அதன் சமூக ஏகாதிபத்தியக் காலனியாகிய இந்தியாவுடன் இலங்கையும் மற்றோர் காலனியாக மாறிவருவதை கண்கூடாகக் காண்கிறோம்.

நாம் எமது சுதந்திரத்தையும் தேசியத்தையும் இழக்கும் சூழல் ஏற்படாது பாதுகாப்பது இந்நாட்டின் தொழிலாள, விவசாயிகளது கடமையாகும். கச்சதீவை வெறும் கற்பாறை என்று இந்தி(ரா)யா கருதியதாக நாம் கருதிவிடப்படாது. ×

## முந்திக் கொள்வோம்

கோடரியைத் தீட்டு  
நச்சு மரங்களினை  
நாம் சாய்க்க வேண்டும் -  
காய்ந்து கருகி  
இற்று விழுமென்று  
இவ்வளவும் பார்த்திருந்த  
ஏமாளித்தனம் விட்டு  
கணமும் தாமதித்தால்  
கக்கும் நஞ்சாலே  
சோலையெலாங் கெட்டு  
நச்சுமரம் பெருகிவிடும்!  
வெள்ளம் வருமுன்னே  
விரைவாய் அணையை  
இன்றே போட்டுவிடு  
இல்லாது தாமதித்தால் -  
வெள்ளம் வந்துன்னை  
விரைவாய் அழித்துவிடும்!  
புதிய சோலையினை  
நீயாக்க வேண்டாமா?  
நச்சு மரங்களினை  
வேரோடு கிள்ளி  
சுட்டுப் பொசுக்கி  
சுடுகாட்டுச் சாம்பலினை  
எருவாகப் போட்டு  
உருவாக்கும் சோலைக்காய் -  
தீட்டு கோடரியை  
விரைவாய்  
தீட்டு கோடரியை!

— நக்கீரன்


15-7-1974இல் இருந்து

'குமரன்' புதிய சந்தா விபரம்

தனிப் பிரதி : 50 சதம்

ஆண்டுச் சந்தா : ரூ. 6/-

ஆங்காங்கே வரவழைத்து விநியோகிப்போருக்கு விசேஷ சலுகைகள் உண்டு. எழுதுக :

நிர்வாக ஆசிரியர், குமரன், 201, டாம் வீதி, கொழும்பு-12

தொலைபேசி : 21388

<><><><> <><><><> <><><> <><><><>

# நண்பர்களும் எதிரிகளும்

— யோ - பெ —

<><><><><><><> <><><> <><><><><>

ஒரு கடலின் மத்தியில் பெரிய மீன்களும், சிறிய மீன்களும் வாழ்ந்துவந்தன.

சிறிய மீன்கள் தன்னிச்சையாக அங்குமிங்கும் திரியும்போது பெரிய மீன்கள் அவற்றைப் பிடித்துத் தின்றுவந்தன.

பெரிய மீன்களுக்கு சிறிய மீன்கள் ஒவ்வொருநாளும் இரையாகிக்கொண்டுவந்தன. பெரிய மீன்களின் இந்தக்கொடுமையால் சிறிய மீன்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்துவரத்தொடங்கின. பெரிய மீன்கள் பக்கம் அவை செல்லவில்லை. பெரிய மீன்களைத் தம் எதிரிகளாக எண்ணிக்கொண்டன. இதனால் பெரிய மீன்களுக்கு இரை கிடைப்பது பெரும் கஷ்டமாகிவிட்டது. சில காலம் சென்றது.

சிறிய மீன்கள் பார்க்கின்றபோது, பெரிய மீன்கள், சிறிய மீன்களைப்போல் பாசிகளையும். அழுக்குகளையும் தின்றுகொண்டிருந்தன. இதைக்கண்ட சிறிய மீன்கள், பெரிய மீன்களும் எங்களைப்போல் மீன்கள்தானே என உள்ளுக்குள் எண்ணிக்கொண்டன. கொஞ்சம் கொஞ்சம் பெரிய மீன்களுக்குப்பக்கமாகச் செல்லத்தொடங்கின. பெரிய மீன்கள் சிறிய மீன்களை நெருங்கி ''நாங்கள் எல்லாம் மீன்கள்; எங்களுக்குள் வேற்றுமை இல்லை. நாங்கள் எல்லாம் ஒன்று. எங்களைக் கொல்லுகின்ற எதிரிகளை நாம் எதிர்க்கவேண்டும். மீன்களின் எதிரிகளை நாம் கொல்லவேண்டும்'' என்று அடிக்கடி கூறிக்கொண்டன. இதனால் சிறிய மீன்களும் பெரிய மீன்களுடன் ஒன்றாக வாழத் தொடங்கின.

இது ஒரு பெரிய மீனுக்குப் பிடிக்கவில்லை. அதற்கு சிறிய மீன்களைப் பிடித்துத் 'தின்பதுதான் ஒரே நோக்கமாக இருந்தது. அது மற்றப் பெரிய மீன்களைப் பார்த்துக் கேட்டது:

''நாங்கள் எல்லாம் மீன்கள், மீன்களைப் பிடித்தத் தின்னும் எதிரிகளை எதிர்ப்போம் என்று கூறுகிறீர்களே: நாங்கள் இனி சிறிய மீன்களை இரையாக்குவதில்லையா?'' என்று கேட்டது.

அதற்கு மற்றப் பெரிய மீன்கள்,



''மடையனே! எங்கள் இரை சிறிய மீன்கள்தான். இரையை நாம் மாற்றப்போவதில்லை'' என்று கூறின. இதைக்கேட்ட மடையனான பெரிய மீனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''அது எப்படி? நாங்கள்தானே கூறுகிறோம். நாங்கள் எல்லாம் மீன்கள், எங்களைக் கொல்பவர்களை எதிர்ப்போம் என்று'' என்று கேட்டது.

''இப்பொழுது சிறிய மீன்கள் எங்களை எப்படி நம்பிக்கொண்டிருக்கின்றன?''

''நண்பர்கள் என்று!''

''தங்கள் எதிரிகள் யார் என்று அவை நம்பிக்கொண்டிருக்கின்றன...... பெரிய மீன்கள் என்றா?''

''இல்லை, வேறு யாரோ என்று''

''இப்பொழுதுதான் எமக்கு வாசி. இனி நாம் சிறிய மீன்களை இலகுவாக இரையாக்கலாம்'' என்று மற்றப் பெரிய மீன்கள் கூறின. இதைக்கேட்ட மடையனான பெரிய மீன், அவை கூறுவதில் நம்பிக்கையில்லாமல், ஒரு சிறிய மீனை ரகசியமாக பிடித்து விழுங்கிவிட்டது. சிறிய மீன்கள், பெரிய மீன்களிடம் ஓடிவந்து ''பாருங்கள், எங்களில் ஒருவனை எங்கள் எதிரிகளில் யாரோ ஒருவன் பிடித்துத் தின்றுவிட்டான்'' என்று கூறின.

அதைக் கூறும்போது பெரிய மீன்கள் பாசிகளையும் அழுக்குகளையும் தின்றுகொண்டிருந்ததை, அவை கண்டன. அதைக் கேட்ட பெரிய மீன்கள்:

''எமது உடன்பிறப்புக்களே! எமது எதிரிகளை நாம் சும்மாவிடக் கூடாது. நாம் எப்படியும் மீன் எதிரிகளை கொன்று தீர்ப்போம்'' என்று கூறி, சிறிய மீன்களை விட ஆவேசமாகப் பேசின.

சிறிய மீன்கள் சந்தோசமடைந்தன. இதைப் பார்த்துக் கொண்டிருந்த மடையனான பெரிய மீன், மற்றப் பெரிய மீன்களிடம் ''நான்தான் மடையனாக இருந்துவிட்டேன். நீங்கள் கூறுவது தான் சரி, சிறிய மீன்களுக்கு தமது எதிரிகள் யார், நண்பர்கள் யார் என்று தெரியாதவரை, நமது காரியத்தைத் தொடர்ந்து நடத்தலாந்தான்'' என்று சந்தோஷத்துடன் கூறியது. ●

## 'களனி' இதழ் 3 படித்துவிட்டீர்களா?

# கேள்வி? பதில்!

→ 'வேல்' ←

கே: இன்றைய அத்துமீறிய விலையேற்றங்களுக்கும் பண வீக்கத்திற்கும் காரணம் என்ன?

— மு. அமிர்தலிங்கம், கண்டி.

ப: பணவீக்கம், விலையேற்றம் என்பன முதலாளித்துவத்தின் சுரண்டல் யந்திரமாகும். காரணங்கள்: (1) எமது முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களான தேயிலை றப்பருக்கு முதலாளித்துவ நாடுகள் நியாயமான விலை தராது மலிந்த விலையில் வாங்குகின்றன. (2) தமது உற்பத்திப் பண்டங்களை உயர்ந்த விலைக்கு லாபகரமாக விற்கின்றன. (3) கடன் தந்து வட்டியாகவும் சுரண்டுகின்றன. (4) இவற்றின் மேலால் உள்நாட்டு முதலாளிகளும் விலைகளை உயர்த்திச் சுரண்டுகின்றனர். சுரண்டல் உக்கிரமடைய வர்க்க உணர்வுகள் கூர்மையடைகின்றன.

கே: யு. என். பி. பலமிழந்து வருகிறது என்று கூறுகிறேன்.

— க. சிந்தாமணி, கொழும்பு.

ப: பிரிந்த ஆளும் வர்க்கம் ஒருமுகப்படுவதையும் ஐக்கிய முன்னணியின் பின்னால் அணி திரள்வதையுமே இது காட்டிநிற்கிறது என்று கூறலாம்.

கே: இன்றைய ஆளும் வர்க்கத்தில் தேசியத்தன்மையா தரகு முதலாளித்துவத் தன்மையா முதன்மையாக நிற்கிறது?

— மு. சின்னத்தம்பி, கண்டி.

ப: ஆளும் வர்க்கத்தவரின் வார்த்தைகளிலிருந்தல்ல, செயல்களை வைத்துக்கொண்டே நாம் முடிவுசெய்யவேண்டும். பொருளாதாரத்தை முன்வைத்து நுணுகி ஆராயும்போது அதிகாரத்துவ முதலாளித்துவம் பலம்பெற்றுவருவதும், தரகு முதலாளித்துவத்தன்மை மேலோங்குவதுமாகவே நிலைமைகள் மாறிவருகின்றன. அதற்குச் சார்பாக பின்வரும் காரணங்களைக் கூறலாம். (1) எமது காலனித்துவ பொருளாதாரமான தேயிலை, றப்பர் இரண்டும் ஏகாதிபத்திய, முதலாளித்துவத்தின் அத்துமீறிய சுரண்டலைத் ஒட்டியே நடைபெறுகின்றன. 20 ஆண்டுகளின் முன் இருந்த விலையிலும் பார்க்க குறைந்த விலையில் தேயிலை, றப்பரை வாங்கிக்கொண்டு தமது பண்டங்களை அன்று இருந்ததிலும்பார்க்க 4, 5 மடங்கு விலையில் விற்கின்றனர். அவர்கள் கொள்ளையடிக்க ஆதரவாகவே இன்றும் எமது அரசு அப்பொருளாதாரத்தைக்கொண்டு செல்கிறது. தோட்டத் தொழிலாளர் உயிர்வாழும் நிலையில் வைத்து ஏகாதிபத்தியச் சுரண்டல் நடைபெறுகிறது. (2) ஸ்ரேலிங் கம்பெனிகளை நஷ்டஈடு இன்றியே எடுக்கும் துணிச்சல் இவர்களுக்கு இல்லை. (3) வெளிநாட்டு வங்கிகள் உள்நாட்டில் மேலும் விஸ்தரிக்க அரசு அனுமதியளித்துவருகிறது. (4) எமது வெளிநாட்டுக் கடன்கள், வட்டிகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. (5) அதிகாரத்துவ முதலாளித்துவம் மேலோங்குவதால் உள்நாட்டில் தேசிய முதலாளித்துவத்தின்மேல் அரசு கண்டிப்பாக இருப்பதாகக் காட்டி திசைதிருப்பம் நடைபெறுகிறது. கைத்தொழிலதிபர்களிலும்பார்க்க இரத்தினக்கல், பாரம்பரிய மற்ற பொருட்களை ஏற்றுமதி செய்வோர் பணம் குவித்து ஆதிக்கம் பெற்றுவருகின்றனர். (6) ஏகாதிபத்திய எஜமானர்களின் மொழியான ஆங்கிலம் மீண்டும் கட்டாய பாடமாக நுழைக்கப்பட்டுள்ளது. (தேசிய ஒருமைப்பாடுகூட இன்றும் ஆங்கில மொழி மூலமே நடைபெறுகிறது. ஆங்கிலத்தை ஒழித்து தமிழர் சிங்களமும், சிங்களவர் தமிழும் கற்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தும் தேசிய, அதிகாரத்துவ முதலாளிகள் இன்னும் வளரவில்லை. ஆங்கிலத்தை வற்புறுத்துவோரே ஆதிக்கம் பெற்றுவருகின்றனர்.)


K. சங்கர ஐயர் B. Sc. Dip–in–Food Sc.
சிறப்புற எழுதிய
**புதியமுறைச் சுகாதாரக் கல்வி**
எட்டாந்தரம்
வெளிவந்துவிட்டது !
**விஜயலட்சுமி புத்தகசாலை**
248, காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-6.
விலை : ரூ. 6-50.

# வர்க்க நீதியின் வரலாறு

— மாதவன் —

1. மாடுகள் குதிரைகளை விலைபேசி ஏலத்தில் விற்பதுபோல சந்தையிலே அடிமை விற்கப்படுகிறான். பொற்காசு, பண்டம் கொடுத்து அவன் வாங்கப்படுகிறான். மாடுகள், எருமைகள்போல உழைப்பை கட்டி வைத்து, தண்டனை கொடுத்துப் பெற எஜமான் உரிமை பெறுகிறான்; வேண்டாதபோது விற்றுவிட, கொல்வதற்குக் கூட எஜமானுக்குக் அதிகாரம் உண்டு. அடிமை மனிதனுக்கும் மிருகங்களின் நீதியே கிடைத்தது.

2. பண்ணை அடிமை எஜமானனை எதிர்த்துப் பேசியதற்காகக் கட்டிவைத்து சவுக்கால் அடிக்கப்படுகிறான்; அல்லது குடிசைக்கு தீ வைத்து பண்ணை அடிமைகள் அனைவருக்கும் பாடம் கற்பிக்கப்படுகிறது.

3. பணக்காரனின் சொத்தைத் திருடியதற்காக கந்தசாமி பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிபதியின் முன் நிறுத்தப்படுகிறான். இரண்டு வருடக் கடுங்காவல்தண்டனை விதிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்படுகிறான்.

நீதி என்பது சமுதாய அமைப்புக்கேற்ப மாறுபடுகிறது. நீதி மேல்மட்ட அமைப்பைச் (Superstructure) சார்ந்தது. அது எப்போதும் அடிப்படை அமைப்பான பொருளாதார அமைப்பிற்கு சேவை செய்வதாகவே அமையும். அடிமையின் உழைப்பைப் பெறுவதுடன் அதே நோக்கமாக நேரடியாக தண்டிப்பதற்கும் எஜமான் முழு உரிமையும் பெறுகிறான், ‘நீதி’ என்பது சட்டங்களாக இடம்பெறாத காலத்தில் ‘தர்மம்’ என கூறப்பட்டது. எஜமான் கூறியவை வழமை, தர்மம் ஆகின. வர்க்க நீதி, மதம் மூலம் தெய்வத்தின் அனுமதியும் பெற்றதாகக் கூறப்படும். இந்தியாவில் மனுதர்மம் புகழ் பெற்றது. அடிமை, பண்ணை அடிமை ஆகிய காலகட்டங்களில் பண்ட உற்பத்தியும் பரிமாறலும் நேரடியாக கவனிக்கப்பட்டதுபோலவே சுரண்டப்பட்டவர்களுக்கு நீதியும் நேரடியாக வழங்கப்பட்டது. அதாவது, உற்பத்தி உறவுகள் நேரடியாக எஜமானுக்கும்–அடிமைக்கும் இடையில் நிலவின. எஜமான், நிலப்பிரபு ஆகியோர் தண்டனைகளையும் நேரடியாக தாமே வழங்கினர். நீதி வழங்கும் விசாரணைக்காக என வாரத்தில் அல்லது மாதத்தில் ஒரு நாளை ஒதுக்கி அதற்கென பிரத்தியேக உடையுடன் குறிப்பிட்ட இடத்திற்கு நீதிவழங்க வருவதுமுண்டு. மன்னர்களே நேரடியாக வழக்குகளை விசாரித்து நீதி வழங்கிய கதைகள் எம் நாட்



டுக் கதைகளில் ஏராளமாக உள்ளன. பசு ஆராய்ச்சி மணியை அடித்ததாகவும் பசுக்கன்றை கொன்றதற்காக சோழன் தன் மகனையே தேர்க்காலில் நெரித்துக் கொன்று நீதியை நிலைநாட்டியதாகவும் கற்பனைக் கதைகள் மன்னரை ஏத்துவதாக பாடநூல்களிலே இன்றும் உள்ளன.

யந்திரப் புரட்சியைத் தொட்டு முதலாளித்துவம் தோன்றியதும் நீதி முறையிலும் புரட்சி ஏற்படவே செய்தது. காரணம், நேரடியாக முன்னர் இருந்த உறவுகள் உற்பத்திப் பண்டங்களினூடாக ஏற்படத் தொடங்கியதாகும். மூன்றாவதான உற்பத்திப் பண்டமூலம் உறவுகள் ஏற்பட்டது போலவே நீதி வழங்குவதற்கும் நீதி மன்றங்கள் என தனி ஸ்தாபனங்கள் தோன்றின. தனிச் சொத்துடைமை, பூஷ்வா வர்க்கத்தின் நலனும் பாதுகாப்பும் தேடுவனவாகவே அவ்வர்க்கத்தால் சட்டங்களும் ஆக்கப்பட்டன. பூஷ்வா வர்க்கமே தம் வர்க்கத்தவரிலிருந்து நீதிபதிகளையும் நியமித்தது. சொத்துரிமை, தக்க வருமானமற்ற தொழிலாளி விவசாயி நீதிபதியாக, யூரியாக வரமுடியாது. காலப்போக்கில் பூஷ்வா ஜனநாயக வளர்ச்சியை ஒட்டி மக்களும் நீதி வழங்குவதில் பங்கெடுப்பதாகக் காட்டுவதற்காகவே யூரி முறையும் முக்கிய வழக்குகளில் ஏற்படத் தொடங்கியது. ‘நீதி மன்றங்கள் நீதி வழங்குவதற்காக அல்ல நீதி வழங்கப்படுவதாக மக்களுக்குக் காட்டுவதற்காகவே உள்ளன’ என்ற ஆங்கில மொழித் தொடர் யாவரும் அறிந்ததே.

மேல்மட்ட அமைப்பான சட்டங்கள் அடிப்படை அமைப்பான பொருளாதாரத்திற்கு சேவை செய்வதாகவே ஆக்கப்படுகின்றன என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும். எம் நாட்டுச் சட்டங்களும் ஏகாதிபத்திய நலன்பேணும் சட்டங்களாகவே ஆக்கப்பட்டன, ரோம ஒல்லாந்துச் சட்டங்கள், ஆங்கில சட்டங்கள் இவற்றில் முக்கியமானவை. சொத்துரிமையைப் பேணும் தேசவழமைச் சட்டம், கண்டியன் சட்டம், முக்குவ சட்டம் ஆகியன உள்நாட்டு பழக்க வழக்கம், மரபு வழிகளைப் பின்பற்றுவன. இவையாவுமே கூட்டு மொத்தமாகப் பார்க்கும்போது தனிச் சொத்துடைமையை பரம்பரை பரம்பரையாக நிலைநாட்டுபவையாக இருப்பதைக் காணலாம். மேல்நாட்டு முதலாளித்துவ வளர்ச்சியே நிலங்களையே பணத்திற்காக ஈடுவைக்கும் சட்ட அனுமதியைக் கொண்டு வந்தது. ஈடு என்பதும் சொத்தின் ஒரு உருவமேயாகும் (நிலம்மாறி பணம் ஆதிக்கம் பெறுவது முதலாளித்துவமாகும்).

இன்று எம் நாட்டிலும் நீதி பரிபாலன நிருவாகத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. இச் சீர்திருத்தத்தில் மேல்நாட்டு பிரிவிகவுன்சிலில் இறுதித் தீர்மானம் எடுக்கும்முறை ஒழிக்கப்பட்டுள்ளது. முன்னைய சட்டங்கள் அவ்வாறே

ருக்கத்தக்கதாக உருவ அமைப்புக்களில் மாறுதல்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதார அமைப்பு அதன் சித்தாந்தங்களை. இத்தகைய மாற்றங்களையும் கொண்டு வருகின்றன. உற்பத்தி வளர்ச்சிக்கு சட்டங்கள் ஈடுகொடுக்க வேண்டும் என்பது உண்மையே. இன்றைய மாற்றங்கள் சோஷலிச சமுதாய அமைப்பைக் கட்டி எழுப்ப உதவுவன என்று கூறுவது ஆராயப்பட வேண்டியதாகும்.

தொழிலாள, விவசாயிகளின் ஆதிக்கம்பெற்ற சோஷலிச சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் ஜனநாயகப்படுத்தப்படுவது போல நீதி பரிபாலனமும் ஜனநாயகப்படுத்தப்படும். அதாவது மக்களாகவே சமூக விரோத குற்றங்களை விசாரித்து தீர்ப்பு வழங்குவர். சட்டங்கள் நீதிகள் யாவும் உற்பத்திக்கு உதவுவனவாகவும் கூட்டு வாழ்க்கைக்கு வழிவகுப்பதாகவும் தண்டனைகள் யாவும் மக்களிடையே செல்வாக்கும், மதிப்பும் பெற்றதாகவும் அமையும். வர்க்க சமுதாயத்தில் உயர் வர்க்கத்தவர் கூடி தமது வர்க்க நலன் பேணும் நீதி வழங்கும்முறை சோஷலிசத்தில் ஒழிந்துவிடும்.

இன்று எமது சமுதாயத்தில் அதிகாரத்துவ முதலாளித்துவம் ஆதிக்கம்பெற்று வருவது யாவரும் அறிந்ததே. கூட்டுத்தாபனங்கள் அரசின் பெரிய முதலீடுகள் யாவும் அரசு அதிகாரிகளின் ஆதிக்கத்தில் உள்ளன. இவ்வாறான மாற்றத்தை ஏற்கும்போது மேல்மட்ட அமைப்பான சட்டங்களும் இத்தகைய அமைப்பை பேணுவதாகவே அமைக்கப்படும், முக்கிய பெரு வழக்குகளில் யூரிமுறை தவிர்க்கப் பட்டது, முன்னர் மக்கள் யூரிமுறையாக பங்குபற்றிய சிறு ஜனநாயக உரிமைகளும் மறைவாகத் தெரிகிறது. சொத்துடமை அழிக்கப்படவில்லை. அதிகாரிகள் அரசின் தேவையை ஒட்டி நிலங்கள், சொத்துக்களை சுவீகரிக்கும் அனுமதியைப் பெற்றுள்ளனர். யாவுக்கும் நட்டஈடு வழங்கப்படும். முன்னர் தரிசாக இருந்த நிலங்களையும் போதிய வாடகைபெற முடியாது இருந்த வீடுகளையும் தமது வர்க்கம் சார்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைத்துப் பணம்பெற்று அரசிடமே முதலீடு செய்து வட்டியாக, முன்னரிலும் பார்க்க அதிக லாபம் சேர்க்க வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வர்க்க சமுதாயத்தில் மேல்மட்ட அமைப்பான சட்டங்களை வைத்துக்கொண்டு சமநீதி வழங்குவது என்பது இயலாததொன்றாகும்.

சுருங்கக் கூறின், பொருளாதார அமைப்பின் வரலாற்றை ஒட்டியே மேல்மட்ட அமைப்பான சட்டம், நீதிகள் மாற்றமடைகின்றன என்பதையும் சோஷலிச சமுதாயத்திலேயே - தனிச் சொத்துடைமையற்ற சமுதாயத்திலேயே வர்க்க நலனற்ற நீதிமுறைமை நிலவ முடியும் என்பதையும் மார்க்ஸிச லெனினிச சிந்தாந்தத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் மறந்து விடப்படாது. +



# திருகோணமலையில் வெடித்த தீப்பொறி

→→→→→→→ தருமன் ←←←←←←←

சென்ற மாதம் 22, 23ம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெற்ற எழுத்தாளர் மகாநாடு இலங்கை வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு காலகட்டத்தைப் பிரதிபலிப்பதாகும். திருகோணமலை, கல்முனை, மன்னார், யாழ்ப்பாணம். கொழும்பு ஆகிய இடங்களில் உதிரிகளாக வளர்ந்த எழுத்தாளர் இயக்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட ஆரம்பித்திருப்பதே இம்மகாநாட்டின் தனிச்சிறப்பாகும்.

எந்த ஒரு இயக்கத்தின் பின்னாலும் அரசியல் பின்னிற்கவே செய்யும். அத்தகைய அரசியலை மறைத்து நசிவுப்போக்காக இயங்க முனைவதெல்லாம் பிற எழுத்தாளர்களையும் மக்களையும் ஏமாற்ற முயலும் முயற்சிகளாகும்.

இம்மகாநாட்டு அறிக்கை காரசாரமாக விவாதிக்கப்பட்டு சமுதாய மாற்றத்தின் அடுத்த காலகட்டம் புதிய சனநாயகப் புரட்சி என்பதும் இயக்கத்தின் நோக்கம் இத்தகைய புரட்சியின்மூலம் 'புதிய சனநாயகத்தை உருவாக்கி, புதிய வாழ்வை மலரச்செய்து, புதிய நாகரீகத்தை தோற்றுவிப்பது' என்பதும் மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்டது. அடுத்ததாக இப்புரட்சிக்காக எழுத்தாளர்கள் எதிர்த்துப் போராடவேண்டிய நான்கு முரண்பாடுகளும் முன்வைக்கப்பட்டன: நிலவுடைமை, முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம்.

அகில இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பற்றியும் இம்மகாநாடு தீர்க்கமான முடிவு எடுத்தது. இச்சங்கத்தின் பின்னால் இருப்பது புரட்சிகர அரசியல் சித்தாந்தமல்ல - திரிபுவாத அரசியல் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இச்சங்கம் புரட்சிகர உணர்வை சமரசப்படுத்தும் நோக்கோடு 'எமக்கிடையில் சீனப்பெருஞ்சுவரில்லை' என்று அனுப்பிய வாழ்த்துச்செய்தியை திருப்பியனுப்புவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்தோடு மகாநாட்டு அமைப்புக்குழுவில் உள்ள எவரும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கக்கூடாது என்றும் முடிவுசெய்யப்பட்டது. மகாநாட்டு அறிக்கையில் மு. எ. சங்கத்தின் முன்னைய தவறான போக்குகள் விமர்சிக்கப்

பட்டு சாதிமுறையான சுரண்டல் யந்திரத்தை நிலைநிறுத்த பிரசாரம் செய்த ஆறுமுகநாவலரை இன்றும் போற்றுவது கண்டிக்கப்பட்டது. வர்க்க சமுதாயத்தில் தேசிய ஒருமைப்பாடு என்ற குரல் பிரச்சனை எதையும் தீர்த்துவிடப்போவதில்லை என்றும் கூறப்பட்டது.

மகாநாட்டின் அறிக்கை காரசாரமாக விவாதிக்கப்பட்டு சில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

மகாநாட்டின் இரண்டாம் நாள் காலையில் செ. கதிர்காமநாதன் அரங்கில் இளம் எழுத்தாளர் அறுவரின் சிறுகதைக்ள் வாசிக்கப்பட்டு அறுவரால் விமர்சிக்கப்பட்டன. கதைகள் அனைத்தும் இன்றைய சமுதாய நிலையையும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் வர்க்கப் பிளவுகளையும் சித்தரிக்கும்விதமாக அமைந்திருந்தன. மூன்று கதைகளில் புரட்சிகர இயக்கங்களும் புரட்சிகர அரசியலும் முன்வைக்கப்பட்டது. சிறுகதையின் தீவிர வளர்ச்சியை கதையரங்கத்தில் காணமுடிந்தது. இரு கதைகள் இன்றைய சட்டதிட்டங்களின்படி அச்சேற்றமுடியாத தனிச் சிறப்புப் பெற்றிருந்தன. விமர்சனங்கள் பகைமையற்றமுறையில் சிறப்பாக அமைந்திருந்தன.

**திமிர்**

ஒருகொத்து அரிசிக்காய்
ஒரு நாள் முழுதும்
கொழுத்தும் வெயிலில்
உழைத்துக்...
சளைத்து...
ஊதியம் பெற
உடையவர் வீடு
சென்றபோது....
''விளக்கு வைச்சாச்சு
விடிய வா!'' - என்றார்.

... குமார் தனபால்.

கவிஞர் பசுபதி அரங்கில் நடைபெற்ற கவியரங்கம் 'பூவுலகுக்கேற்ற தினி புதிய ஜனநாயகமே.....' என்ற பொருளில் அரசியலையே முன்வைத்து நடைபெற்றது. பசியையே மறந்து பிற்பகல் 2-30 வரை நடைபெற்ற கவியரங்கத்தையும் விமர்சனத்தையும் யாவரும் சுவைத்து, உணர்ச்சியுடனும் எழுச்சியுடனும் கேட்டுக்கொண்டிருந்தனர். இன்றைய வர்க்க சமுதாய சீரழிவை புரட்சிகர அரசியலில் தேய்க்கும்போது சீறும் நெருப்புச் சுவாலைகளை கலைநய ஓசையில் கேட்க முடிந்தது. இத்தகைய கலைநயமும் வீரஉணர்வும்கொண்ட கவியரங்கம் இதுவரைநாளில் ஈழத்தில் எங்கும் நடைபெறவில்லை என துணிபாகக் கூறலாம்.

மாலையில் அ. ந. கந்தசாமி அரங்கில் கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் குறிப்பிடப்பட்டிருந்த பழைய எழுத்தாளர்களில் சிலர் வரவில்லை. ஆயினும் பங்குபற்றிய முதிர்ந்த எழுத்தாளர் யாவ



ரும் புரட்சிகர அரசியலை முன்வைத்தே பேசினர். புரட்சிகர கலை, இலக்கியம் (மார்க்ஸிய சித்தாந்தத்தின் அடிப்படையில்) சரியான அறிவையும் கலை உருவின் மகிழ்வையும் தருவது மட்டுமல்ல. மூன்றாவதாக செயலூக்கமும் வீர உணர்வும் ஊட்டவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

இரவு திருகோணமலை சரவணமுத்து அரங்கில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கூட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இம்மகாநாடு பிரதிபலித்த சில சிறப்புகளை அடுக்கடுக்காக கூறலாம்: (1) ஈழத்து எழுத்துலக வரலாற்றில் புரட்சிகர அரசியலை முன்வைத்த முதலாவது எழுத்தாளர் இயக்கத்தின் ஆரம்பம் (2) இளம் எழுத்தாளர்களது [முக்கியமாக கிழக்கிலங்கை எழுத்தாளர்களைக் குறிப்பிடவேண்டும்] அரசியல் வளர்ச்சியும் புரட்சிகர உணர்வும் (3) பகைமையற்ற கலை, இலக்கிய விமர்சனம் (4) சமரசமோ நசிவுப்போக்கோ இல்லாத தெளிவான துணிச்சலான கொள்கை (5) நினைவுபூர்வமாக கலை, இலக்கியம் படைக்கும் இளம் எழுத்தாளரின் ஆற்றல் (6) எழுத்தாளரின் திரிபுவாதப் போக்கிற்கு கண்டனமும் எதிர்ப்பும். ○

XXXXXXXXXXX XXXXXXXXXXXX XXX XXXX

## புயல் வருகிறது

புயல் எங்கள் வீடுகளின் கூரைகளைப் பிடுங்கிவிட்டது;
மழை எங்கள் மண்சுவர்களைக் கரைத்துவிட்டது
வெள்ளம் எங்கள் கிராமத்தை அழித்துவிட்டது
நாங்கள் தெருவில் நின்று அழுகின்றோம்
ஆனால்!
உங்கள் வீடான பாராளுமன்றம்
நிலைக்கிறது என்று திமிருதீர்
இதோ மக்கள் புயல் வருகிறது.
கவனம்! ஏனென்றால்!
அது!
புரட்சிப் புயலாக வருகிறது!

— திருமலை நவம்

விற்பனையாகின்றன !

**புலவர் 'தமிழவேள்' எழுதிய**

**தமிழ் இலக்கியத் தொகுப்பு - வினவிடை** ரூ. 3/75

**தமிழ் இலக்கியத் தொகுப்பு- விளக்கம்** ரூ. 5/50

**சைவசமயம் - வினவிடைமுறை விளக்கம்** ரூ 5/-

---

**பொறியியலும் சடப்பொருட்களின் இயல்புகளும்**

(MECHANICS & PROPERTIES OF MATTER)

பரீட்சை மாதிரி வினா - விடைகளையும் கொண்டது

---

வெளிவந்துவிட்டன !

'தமிழவேள்' எளிதாக எழுதிய

**தமிழ் 6 — பயிற்சி** ரூ. 4-75

**தமிழ் 7 — பயிற்சி**

---

விஜயேந்திரன் எழுதிய

**ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை** ரூ. 4-00

டாக்டர் மகேசன் ராசநாதன்

எழுதிய

**அறிவுக் களஞ்சியம்**

(Junior Encyclopaedia in Tamil) ரூ. 5-50

---

**விஜயலட்சுமி புத்தகசாலை**

248, காலி வீதி : : வெள்ளவத்தை

கொழும்பு–6.

தொலைபேசி: 88930



## ஜி. சி. ஈ. (உயர்தர வகுப்பு) நூல்கள் :

| | |
|---|---|
| தாவரவியல் — பரமானந்தன் 2 பகுதிகள் | 28/– |
| விலங்கியல் — சங்கரஐயர் 4 பகுதிகள் | 29/75 |
| விலங்கியல் பயிற்சிகள் | 3/- |
| இரட்சணிய யாத்திரிகம்: — சிலுவைப் பாடு | 2/- |
| A CONCISE ATLAS GEOGRAPHY OF CEYLON — Foreword by Prof. K. Kularatnam | 5/- |
| இலங்கையின் தேசப்படப் புவியியல் | 3/75 |

## ஜி. சி. ஈ. (சாதாரண வகுப்பு) பாட நூல்கள்:

| | |
|---|---|
| 1. நவீன இரசாயனம் I | 4/50 |
| 2. நவீன இரசாயனம் II | 8/75 |
| *பரமானந்தன் & பாலசுந்தரம் [திருத்திய பதிப்புகள்]* | |
| 3. நவீன உயிரியல் I | 5/00 |
| 4. நவீன உயிரியல் II | 6/50 |
| *பரமானந்தன், இராஜசேனன் & குலேந்திரன் [திருத்திய பதிப்புகள்]* | |
| 5. நவீன பௌதிகம் I | 5/50 |
| 6. தமிழ் இலக்கியத் தொகுப்பு — விளக்கம் | 5/00 |
| 7. தமிழ் இலக்கியத் தொகுப்பு வினவிடை | 3/75 |
| 8. இந்து சமயம் - வினவிடை முறை விளக்கம் | 5/- |

### பிற பாட நூல்கள்

| | |
|---|---|
| புதுக்கணிதம் 7 பகுதி I | 3/- |
| ,, பகுதி II | 3/- |
| புதுக்கணிதம் 8 பகுதி I | 3/– |
| ஒன்றிணைந்த விஞ்ஞானம் | 3/– |
| தமிழ் 6 — பயிற்சி | 4/75 |
| தமிழ் 7 — பயிற்சி | 5/75 |
| அறிவுக் களஞ்சியம் | 5/50 |
| புதுமுறைச் சுகாதாரக்கல்வி — எட்டாந்தரம் | 6/50 |

*கிடைக்குமிடம்:*

**விஜயலட்சுமி புத்தகசாலை**

248, காலி வீதி — வெள்ளவத்தை,

கொழும்பு–6. தொலைபேசி: 88930

# கூட்டங்கள்

* பெருமாள்

''அவர்களது களையிழந்த முகத்தைப் பாருங்கோ''.

''அதற்கென்ன?''

''தாமாக விரும்பி ஊர்வலத்தில் சேர்ந்தவர்களாகத் தெரிகிறதா?''

''நீண்ட நேரம் ஊர்வலத்தில் ஊர்ந்து களைத்துவிட்டார்கள் என்று ஏன் சொல்லப்படாது''.

''முன்னே யு. என், பி. ஒழிக என்று கத்துபவர்கள் கூலிப்படைகள். இவர்கள் அவர்களால் வற்புறுத்தி அழைத்துவரப்பட்ட கூலிகள்''

''தோட்டத் தொழிலாளர்களை அத்தனை கேவலமாக கூலிப்படைகள் என்று பேசவேண்டாம்''.

''தான் கூலி வாங்கிக்கொண்டு ஊர்வலத்தில் சேர்ந்ததற்காகத் தான் சொன்னேன்''.

''தோட்டத் தொழிலாளர் வர்க்க உணர்வு பெற்றவர்கள் அப்படியெல்லாம் வரமாட்டார்கள்''.

''இவர்கள் வரப்பண்ணியிருக்கிறார்கள். வராவிட்டால் தோட்டத்திலிருந்து விரட்டிவிடுவோம் என்று வெருட்டி பஸ், லொறிகளில் ஏற்றிக்கொண்டுவந்திருக்கிறார்கள். முகங்களிலும் நடையிலும் பார்க்கத் தெரியவில்லையா?''.

ஏரிக்கரை ஓரமாக நின்று நீண்ட ஊர்வலத்தைப் பார்த்து கோஷங்களைக் கேட்டுக்கொண்டிருந்த தில்லைநாதனுக்கும் பாலச்சந்திரனுக்குமிடையில் அபிப்பிராயபேதமேற்பட்டது.

''தொழிலாளர்களை ஏமாளிகளாகக் கருதிவிடாதே''

பாலசந்திரன் கூறினான்.

''பலவேளைகளில் அவர்கள் ஏமாளிகளாக ஆக்கப்பட்டுவிடுகிறார்கள், நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டமும் வறுமையும் அதிகரிக்கும்போது தொழிலாளர்களின் ஒற்றுமையை நசுக்கிவிடமுடிகிறது''



தில்லைநாதன் கூறினான்.

''அது தவறு. அவ்வேளைதான் வர்க்க உணர்வு மேலும் கூர்மையடைகிறது''.

''அரசியலறிவு வளர்ச்சியின்மூலந்தான் அவ்வாறு கூர்மை ஏற்படமுடியும். மாதச் சம்பளம், சம்பள உயர்வுப் போராட்டங்களால் அல்ல''.

''தோட்டத் தொழிலாளர்களே இந்நாட்டின் மிகப் பெரும் பாட்டாளிகள், சொத்து எதுவுமற்று உழைப்புச் சக்தியை மட்டும் கொண்ட உண்மையான பாட்டாளி வர்க்கம்''

சந்திரன் கூறினான்.

''பண்ணையடிமை, நிலவுடைமைச் சுபாவங்கள் அவர்களிடம் இன்னும் நீடித்துள்ளன. தமது குடும்பத்தையே சொத்தாகக் கருதுகிறார்கள். அதனால் வர்க்கப் போராட்டத்தில் குதிக்க அஞ்சுகின்றனர்''.

ஊர்வல முடிவில் இருவரும் சேர்ந்துகொண்டனர். மைதானத்தில் கண்டி நகரம் முன் என்றும் கண்டிராத மிகப் பெரிய கூட்டம்.

சுதந்திரக் கட்சி பிரமுகர்கள் பேசிக்கொண்டிருந்தனர். கூட்டத்தில் ஆரவாரமேயில்லை. பிரதமர் பேச ஆரம்பித்ததும் ஆரவாரம் அதிகரித்தது.

''இது திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம்''

தில்லைநாதன் கூறினான்.

''அதனாலென்ன. உனக்குப் பொறாமையாயிருக்கிறதா?''.

''ஹிட்லர்கூட இப்படியான கூட்டங்களை ஏற்பாடுசெய்தானும். ஆங்காங்கே தனது கையாட்களை இருத்திவிட்டு பேசும்போது இடையிடை சிக்னல் காட்டி தன் கட்சி ஆட்கள்மூலம் கரகோசம் ஏற்படுத்துவானும்''

''நீ புருட்டஷ் அல்ல. பொறாமையில் பொசிகிறாய்; விரைவில் யு. என். பி.யில் சேர்ந்துவிடலாமே''.

''அதல்ல, திடீரென ஏற்பாடு செய்யப்படும் இத்தகைய பெரிய கூட்டங்கள் ஏன் நடாத்தப்படுகின்றன என்றுதான் யோசிக்கிறேன்''.

''மக்களிடம் தமது கொள்கைகளை விளக்க என்று கூறுகிறேன்''.

''அல்ல மக்களிடம் தமக்குச் செல்வாக்கு உள்ளதாகக் காட்டிக் கொள்ள''.

''அவ்வாறு கூறி சர்வாதிகார ஆட்சி ஏற்படுத்திவிடுவார்கள் என்று சொல்லுகிறாயா?''.

"ஏனப்படிக் கொள்ளப்படாது என்று கேட்கிறேன்".

"ஏனப்படிக்கொள்ளவேண்டும். திடீர் தேர்தலுக்கு முஸ்திபு என்று கூறப்படாது".

சந்திரன் திடீரெனக் கூறியதை தில்லைநாதனால் ஏற்க முடியவில்லை.

"ஆளும் கட்சி மட்டுந்தானே இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறது. பூஷ்வா ஜனநாயகத்தில் நம்பிக்கையிருப்பின் யு.என்.பி.யையும் கூட்டம்போடவிடலாமே."

"அவர்களுக்கிருந்த வாய்ப்பை அவர்கள் துர்ப்பிரயோகம் செய்துவிட்டார்கள்"

சந்திரன் சொன்னான்.

"அந்தளவு விரைவில் தேர்தல் வைப்பார்கள் என்று நான் நம்பவில்லை."

"ஏன் வைக்கமுடியாது? அரசுக்கு நாள்தோறும் ஆதரவு வளர்ந்து வருகிறதை இக்கூட்டத்திலிருந்தேயே பார்க்கலாம். பிரதமருக்கு ஜனநாயகத்தில் என்றும் நம்பிக்கையுண்டு."

"ஜனநாயக உரிமைப்படி 77 வரை ஆள உரிமை இருக்கிறது தானே?"

"யு.என்.பி 75 மே யில் தேர்தல் நடாத்தவேண்டும் என்று தானே கூக்குரலிடுகிறது. அவ்வேளை நடாத்தினால் தம்மால்தான் தேர்தல் நடாத்தினார்கள் என்று பிரசாரம் செய்வார்கள். அதன் முன்னர் நடாத்திவிட்டால் யு என்.பி.யின் துர்ப்பிரசாரத்தை முற்றாக ஒழித்துவிடலாம். சோஷலிசத் திட்டங்களை தொடர்ந்து 80ம் ஆண்டு வரை அமுல் நடாத்திவிடலாம்".

சந்திரன் கூறியது தர்க்கரீதியான யோசனையாகவே தோன்றியது. ஆயினும் தில்லைநாதனால் அதை ஏற்கமுடியவில்லை.

"ராத்திரி இப்படியெல்லாம் கனவு கண்டாயா?"

"ஏனப்படிக் கேட்கிறாய்?"

"நல்ல யோசனைதான், ஆனால் அதில் ஓர் அடிப்படைத் தவறு இருக்கிறது".

"என்ன தவறு".



"யு. என். பி. வெற்றிபெற்றுவிட்டால்..."

"அது எப்படி முடியும்? கூட்டங்கள், பத்திரிகைகள், வானொலி எல்லாவற்றையும் பார்க்கும்போது அரசு பெற்றுவரும் ஆதரவையும் வளர்ச்சியையும் காணலாமே".

"பத்திரிகை, வானொலியைக்கொண்டு தேர்தல் முடிவைத் தீர்மானிக்கமுடியாது என்பதை இலங்கையில் பல தேர்தல்கள் நிரூபித்துவிட்டன".

தில்லைநாதன் கூறினான்.

"யு, என். பி. யின் அசுமாத்தமே இப்போது இல்லை. அது அடங்கிவிட்டது".

"அல்ல, புலி பதுங்குவதைப்பார்த்து அது பூனையாகிவிட்டது என்று கூறிவிட முடியாது. அது பாய்வதற்கு காலம் நேரம் பார்த்துக்கொண்டிருக்கிறது".

"இனிமேல் பாய்ந்து பார்க்கட்டுமேன்".

சந்திரன் கூறினான்.

"நீகூட இப்படி மயங்கிப்பேசுகிறாயா? யு. என். பி. ஒரு கட்சியல்ல. அது ஒரு வர்க்கம்".

"எனக்குத் தெரியும். ஆனால் அந்த வர்க்கம் அடக்கப்பட்டுவிட்டது"

"அது எப்படி முடியும்? அது இன்றைய அரசின்பின்னால் அணி திரள்வதாக பாசாங்கு செய்துகொண்டு நிற்கிறது. சந்தர்ப்பம் கிடைத்ததும் புலியாகப் பாய்வதை இருந்து பார்"

தில்லைநாதன் கூறினான்.

பேச்சுகள், ஆரவாரங்கள் முடிந்து கூட்டம் கலைந்துகொண்டிருந்தது. சோர்வும் களைப்பும் மக்கள் முகத்தில் பரவியிருந்தது.

"இத்தனை சமுத்திரம்போன்ற மக்கள் கூட்டத்தின் மேலா"

சந்திரன் கூறினான்.

"இத்தனைபேரும் கட்சியின் ஆதரவாளர்களா? இப்போதெல்லாம் கூட்டங்களே குறைவு. வேடிக்கை பார்க்க யு. என். பி. யினர் கூட வந்திருப்பார்கள்".

"நீ விஷயம் அறியாமல் பேசுகிறாய். அரசாங்கத்தின் நிலச் சீர்திருத்தக்கொள்கையால் இப்பகுதி மக்களெல்லாம் பயன்பெற்றுள்ளார்கள். தோட்ட நிலங்களெல்லாம் மக்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன"

சந்திரன் சொன்னான்.

"இது வெறும் சீர்திருத்தம்தானே, புரட்சியல்லவே. நிலச் சொந்தக்காரருக்கு நஷ்டஈடு வழங்கப்படுகிறது. சொத்துரிமை மீண்டும் நிலைநாட்டப்படுகிறது".

"எப்படியென்றாலும் யு. என். பி. இதையாவது செய்திருக்குமா?"

"ஏன் செய்திருக்க முடியாது? நிந்தக உரிமைச்சட்டம் கொண்டுவரவில்லையா? அமெரிக்காவே லத்தீன் அமெரிக்க நாடுகளில் நிலங்களைப் பகிர்ந்து கொடுக்கும்படி இன்று வற்புறுத்துகிறது. இல்லாவிட்டால் விவசாயிகளின் புரட்சி ஏற்பட்டுவிடுமென்று அஞ்சுகிறது".

"விவசாயிகளுக்கு இந்த அரசுபோல் முன்னர் எவரும் ஊக்கமளிக்கவில்லை".

"இவற்றை முன்னர் ஆட்சியிலிருந்தபோதே செய்திருக்கலாமே. இன்று தவிர்க்கமுடியாத பொருளாதார நெருக்கடியால்தான் இவற்றைச் செய்திருக்கிறார்கள்".

"நீ யு. என். பி.யில் சேர்ந்திருக்கலாமே".

சந்திரன் சொன்னான்.

"நீ சுதந்திரக்கட்சியென்றால் யு. என். பி.க்கும் உனக்குமிடையில் அதிக வேற்றுமையிருக்காது. பகைமையற்ற உறவு. இரண்டுமே ஒன்றுபட்டாலும் ஆச்சரியமில்லையே. ஜே. ஆர். கூட முன்னர் அதற்குத்தானே முயன்றார்".

"நான் கூறுவதெல்லாம் தவறு?"

"தவறில்லை. நாம் ஒரேவர்க்கத்தின் இரு பிரிவுகளைப்பற்றித்தானே பேசிக்கொண்டிருந்தோம். அதனால் தொழிலாள, விவசாயிகளின் ஆட்சியைப்பற்றி மறந்துவிட்டோம். பாட்டாளிவர்க்கத்திற்கு அந்த ஒரே வழிமூலம்தான் விடிவு ஏற்பட முடியும்"

தில்லைநாதன் வர்க்க அரசியலுக்கு வந்தான்.

"இன்றைய மாபெரும் கூட்டங்கள் பாராளுமன்ற கட்சி அரசியலை முன்வைப்பவை, தொழிலாள விவசாயிக்கு மயக்க மூட்டுபவை என்று கூறுகிறாய்"

சந்திரன் சொன்னான்.

"இதுவரை நடந்த எமது ஆராய்ச்சியெல்லாம் சுறுக்குமரத்தில் ஏற முயலும் முடிவில்லாத அபிப்பிராயங்களே. தொழிலாள, விவசாயி மயக்கம் நீங்கி ஆதிக்கம்பெறும் வழிகளைப்பற்றி, விவாதிப்பது தான் பயன்தரக்கூடியது".

தில்லைநாதன் முடித்தான்.



# டட்லியின் நினைவாக

**அழகியதீபன்**

டட்லியே! நீ இறந்து ஓராண்டு நிறைகிறது! உன்னை இழந்து இங்கு தவிப்பவர்கள் பலர்! உன் நினைவால் இங்கு அழுபவர்கள் ஒரு கூட்டம்! அவர்களுக்கு நீ ஒரு பேரிழப்பு!

யு.என்.பி யின் தலைவனாய், நான்குமுறை நாட்டின் பிரதமராய், ஜனநாயகத்தின் காவலனாய், மகத்தான சேவை செய்தாய், மக்களைப் பாதுகாத்தாய் என்றெல்லாம் மார்தட்டிப் புலம்புகின்றார்! மக்களைக் கூட்டிக் கண்ணீர் சொரிகின்றார்?

உன் ஞாபகமாய், மண்டபம் கட்டுகின்றார், மாபெரும் சிலையமைக்க முனைகின்றார் உன்பேரில். பூசைகள் செய்கின்றார், தானங்கள் வழங்குகின்றார், அருந்தொண்டு செய்வதிலே அப்பனின் பிள்ளையென்று அடித்து முழக்குகின்றார். உன் உருவத்தை பத்திரிகை சஞ்சிகைகள், வீதிகள் சுவர்களிலே பெரிதாகப்போட்டு உன் தலைமையை வியக்கின்றார். உன்னைப் போற்றிப் புகழ்பாடும் அன்பர்கள் அனுதாபிகள், தாசர்கள் யாரென்று பார்த்தேன்.

அவர்களும் மக்கள்போறதான் இருக்கின்றார்; மக்கள் மத்தியில் இருக்கின்றார். வர்க்கக் கண்ணோடு வடிவாகப் பார்த்தேன். அவர்கள் இந்நாட்டின் தொழிலாளி வர்க்கமுமில்லை, புத்திஜீவிகளோ இளைஞர்களோ யாருமில்லை.

வேறு யாராக இருக்கும்? கூர்ந்து பார்த்தேன். தோட்டச் சொந்தக்காரர்கள் நில புலமுடையவர்கள்! பெரு முதலாளிகள்; பத்திரிகைக் கம்பனிக்காரர்கள், பெரு வியாபாரிகள், பதுக்கல்காரர்கள், அந்நியச்செலாவணி மோசக்காரர்கள், கள்ளர்கள், காடையர்கள், கடைப்புளிகள், இவர்களுடன் ஏகாதிபத்தியவாதிகள். ஓ! இவர்கள் தான் சொத்துடைய வர்க்கம் மக்களைச் சுரண்டுகின்ற மோசக்கார வர்க்கம்.

அவர்கள் உன்னைப் போற்றுவது சரி! ஏனெனில், நீ காத்த ஜனநாயகம் இந்தச் சுரண்டும் வர்க்கத்தின் ஜனநாயகம். நீ போற்றிய சுதந்திரங்கள் இந்தச் சொத்துடைய வர்க்கத்தின் சுதந்திரங்கள்.

நீ புரிந்த அரசு இந்தப் பிற்போக்கு வர்க்கத்தின் அரசு. நீ காட்டிய பாராளுமன்றப்பாதை இந்த எதிரி வர்க்கங்களின் பாதை. ஆம் அவர்கள் நிச்சயம் உன்னைப் போற்றவேணும். நன்றிகள் கூறி நாநிறையத் துதிக்கவேணும். அவர்களுக்கு நீ அன்பன்! அவர்களுக்கு நீ தலைவன்!

ஆனால் மக்களுக்கு? மக்கள் மத்தியில் மக்கள்போல் நின்ற கயவன் நீ! மக்களுக்கு நீ செய்த மகத்தான சேவை சுரண்டும் வர்க்கங்களுக்காக மக்களை ஏமாற்றியது. சுரண்டும் வர்க்கங்களின் ஜனநாயகம், சுதந்திரம், தேர்தல், பாராளுமன்றம் என்பவை மக்களுடையது என நம்பவைக்க அரும்பாடுபட்டாய். அப்பன்விட்ட அடிச்சுவட்டில் சுரண்டும் வர்க்கத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் விசுவாசமான காவல் நாயாக இருந்தாய்.

அதனால் நீ! மக்களின் எதிரி, மக்களின் பரம விரோதி, மக்களின் விரோதி மாண்டுவிட்டான் என்று மகிழ்ச்சிகொள்ள முடியவில்லை. ஏனெனில் நீ காத்த வர்க்கங்கள் இங்கு அப்படியே இருக்கின்றன. காலூன்றிக் கைகோர்த்துப் பலமாக நிற்கின்றன. பகிரங்கமாகவும், இரகசியமாகவும் தம் காரியங்கள் புரிகின்றன. நீ விட்ட இடத்தில் இருந்து அடியெடுத்து நடக்கின்றன. அனுபவங்கள் எங்களுக்குப் படிப்பினைகள்! இந்த வர்க்கங்கள் படிப்படியாய் இறக்கும் என நாம் பார்த்திருக்கப்போவதில்லை. ஏனென்றால் பிற்போக்கு வர்க்கங்கள் தாமாகச் சாவதில்லை, அடிக்காமல் சாவதில்லை. இந்தக் கொள்கையில் நாம் திரிபடையோம்; மயக்கம்கொள்ளோம்! தூக்கமின்றி விழித்திருப்போம்! செயல்படுவோம்!.

★

<><><> <><> <><><> <><><><><><><>

**உலகினையே வென்றிடுவார்**

முன் நிலவை
முலையை — பெண்
பின்னழகை
கன்னலெனக்
கவி பாடுவதால்
என்னுலக தொழிலாள
ஏழை விவசாயிகள்
உன்னருகே வரார்
உலகினையே வென்றிடுவர்
உன் மயக்கம் கொன்றிடுவர்

— மாதுங்கன்

**நிமிர்கின்றோம்**

தேனைப் பொன்நிலவு
எறிந்தால் என்ன
மீனை நட்சத்திரங்கள்
வானில் பறந்தாலென்ன
தானை இயக்கத்தில்
நிலைக்காதவர்கள்
காணாத வழிக்கு
கல்லை இழுப்பதை
நேராக அழிப்பதற்கு
நிமிர்கின்றோம் நாங்கள்.

- மாதுங்கன் -

<><><><> <><><><> <><><> <><><><>



# நமது பிரச்சனைகள்பற்றி நாம் ஆராய்வோம் - 3.

(காமினி குணவர்த்தன அவர்களால் ஆங்கிலத்தில் இதே தலைப்பில் வெளியிடப்பட்ட நூலின் சுருக்கம்).

எமக்கு வேண்டிய உணவை வளமற்ற சிறுசிறு துண்டு நிலங்களில் பயிரிடும் 5 லட்சம் விவசாயக் குடும்பங்கள் இந்நாட்டில் உள்ளன. இது தவிர தேயிலை, றப்பர், தென்னை, கொக்கோ, கோப்பி, கறுவா பிற பயிர்கள் ஆகியவற்றை சிறு துண்டு நிலங்களில் பயிரிடும் 2 லட்சம் குடும்பங்களும் உள்ளன. உணவு நெருக்கடி உள்ள இவ்வேளையில் கூட 'ஆண்டே' முறையில் 25% தொடக்கம் 50% வரை தமது உழைப்பின் வாரங்கொடுக்கும் விவசாயிகள் மூன்று இலட்சம் உள்ளனர்.

நிலம்.

பயிரிடக்கூடிய 20% நிலம் தரிசாகவும் பயனற்ற உற்பத்தியில் ஈடுபட்டதாகவும் உள்ளது. இந்நிலமெல்லாம் நீர், தெருக்கள், மின்சாரம் ஆகிய வசதிகளைக்கொண்டன. இந்நிலங்களை தக்கவாறு பயன்படுத்தி எமக்கு வேண்டிய நெல், உருளைக்கிழங்கு, பருத்தி, கரும்பு, பழங்கள், காய்கறிவகை ஆகியவற்றை பயிரிட்டுவிட முடியும். இந்நிலங்களில் பயிரிட நிலத்தை ஆள்பவருக்கு அறிவு, விருப்பம், மூலதனம் இல்லையென்றல்ல. ஆனால் உழைக்கும் ஆர்வமும் அனுபவமும் அறிவும் உள்ளவருக்கு நிலமில்லை.

பயிரிடக்கூடிய 37 லட்சம் ஏக்கர் நிலத்தில் நிலச் சீர்திருத்தத்தை அரசு கொண்டுவர விரும்பும் ஏக்கர் தொகை 45 லட்சமாகும். இந்நிலத்தை தமது கட்சியைச் சார்ந்தவர்களுக்குப் பங்கிடுவதன்மூலம் முன் இருந்த நிலையிலும் மோசமாக ஆக்கிவிடலாம். ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலுள்ள பெருந்தோட்டங்களை அரசு கவிகரிக்கவில்லை. பிப்ரவரியில் அரசு ஏகாதிபத்திய பெருங்கம்பனியான இலங்கை புகையிலைக் கம்பனியுடன் கூட்டாக நிலக்கடலை பயிரிட ஒப்பந்தம் எழுதியது.

(21) இன்றைய உணவு நெருக்கடி தீர உழைக்கும் விவசாயிகளிடை நிலங்களைப் பங்கீடுசெய்யவேண்டும்.

(22) விவசாயிகள், பெருந் தோட்டத் தொழிலாளர்களிடை தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டிகளின் பொறுப்பில் நிலப்பங்கீடு ஒப்படைக்கப்படவேண்டும்

(23) உழுபவனுக்கே நிலம் சொந்தமாகவேண்டும். வாரம், நிலத்திற்கு விலைகொடுத்தல் ஆகிய பேச்சே இருக்கப்படாது. குடும்பத்தவர் மட்டும் உழைக்கத்தக்க அளவிற்கே நிலம் விட்டு மிகுதியை நிலமற்றவர்களிடை பங்கிடவேண்டும்.

**சிறு கைத்தொழிலாளரும் மீனவரும்.**

இத்துறையில் 6 லட்சம் குடும்பங்கள் உள்ளன. அவர்களில் 2 லட்சம்பேரே சிறு வள்ளங்கள், தச்சுக்கடைகள், செங்கல் சுண்ணும்பு சூளைகள், கொல்லர் பட்டறைகள், மின், பொறியியல் திருத்தல் கடைகள், சலூன்கள், சலவைத்தொழிற்கடைகள் வைத்துள்ளனர். இவர்கள் தமது குடும்ப உழைப்பையும் சிறு கூலி உழைப்பையும் கொண்டவர். இவற்றை விரிவாக்க வாய்ப்பு அளிப்பின் எமக்கு இன்று அவசியமான கைத்தொழிற் பொருட்களை எளிதில் பெற்றுக்கொள்ளலாம். கடன், மூலப்பொருட்கள், சிறு பொறியியல் உதவிகள் தருவதன்மூலம் இக்கடைகளில் விவசாயக் கருவிகள், மண்வெட்டிகள், டிராக்டர் மாற்றுறுப்புகள் ஆகிய அனைத்தையும் உற்பத்திசெய்யமுடியும்.

இன்று ஒருசத வீதமானவருக்குமட்டுமே இத்துறைகளை விரிவுபடுத்த வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஆளும் வர்க்கத்தைச்சேர்ந்த பெரு முதலாளிகளாவர். மற்றைய 99% உழைப்பாளர்களும் நசுக்கப்படுகின்றனர்.

(24) முன்கூறிய சிறு வாய்ப்புகளை உள்ள மீனவர் சிறு கைத்தொழிலாளர் விரிவுபடுத்தவேண்டிய வாய்ப்புகள் செய்யவேண்டும்.

(25) இவர்களிடை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து உற்பத்திக் கருவிகளை நவீனப்படுத்த உதவவேண்டும்.

(26) இவர்களுக்கு அரச கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், பிற கடன் நிலையங்கள், மூலப்பொருள் இறக்குமதி பங்கீட்டு நிலையங்கள் ஆகியவற்றில் அங்கத்துவம் வழங்கவேண்டும்.

**கிராமப்புறப் பாட்டாளி.**

கிராமப்புறங்களில் ஏறக்குறைய 20 லட்சம் வாலிபர்களும் இளம் பெண்களும் உள்ளனர். இவர்கள் 7-10 வருடங்கள் கல்வி கற்றவராவர்.

இவர்கள் விவசாயிகள், சிறு கைத்தொழிலாளர், மீனவர்களது பிள்ளைகள், பொருளாதார வளர்ச்சியின் தேக்கத்தால் இவர்கள் வேலையில்லாதுள்ளனர். ஒரு பகுதியினர் சில வேளைகளில் ஒரு பகுதி



நேரம் உழைக்கின்றனர். வேறு ஒரு பகுதியினர் பயனற்ற தொழிலாளர்களாக பீடி சுற்றுதல், தும்படித்தல் போன்ற வேலைசெய்கின்றனர். மற்றொரு பகுதியினர் பெற்றோருக்கு உதவுகின்றனர்.

இத்தகைய பெரும் பாட்டாளிவர்க்க வளர்ச்சி, சமுதாய வளர்ச்சியில் உலகில் வேறெங்கும் காணமுடியாததொன்றாகும். 1964ல் இருந்து, முன்னைய இடதுசாரி இயக்கங்கள் இப்பிரச்சினைக்கு முடிவுகாண முயலவில்லை. இதனால் புதிய புரட்சிகர இயக்கங்கள் தோன்றி கல்விகற்ற கிராமத்துப் பாட்டாளிகளிடை அரசியலுணர்வைப் பரப்பினர். 1970ல் இவர்கள் மூன்று பல்கலைக் கழகத்து மாணவர் மன்றங்களையும் கைப்பற்றினர். 1971ல் பொலிசாரின் அடக்குமுறைக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த இவ்வியக்கம் நசுக்கப்பட்டது. கிராமப் பாட்டாளிகள் கிராம வாழ்க்கையின் மிகப் பெரும் ஆக்க சக்தியாவர்.

(27) இப்பாட்டாளிகளின் தலைவர்கள் விடுதலைசெய்யப்படுவதோடு இவர்களது கட்சியின்மேல் விதிக்கப்பட்ட தடை நீக்கப்படவேண்டும். பொலிசாருக்கெதிராக 1971ல் கிளர்ந்தெழுந்த பாட்டாளிகள் அனைவர்க்கும் மன்னிப்பு அளிக்கவேண்டும். இவர்களுக்கு விவசாயக் கமிட்டிகள், சிறு கைத்தொழிலில் ஈடுபடும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்துவமளிக்கவேண்டும். பயன்படுத்தப்படாத நிலம், உற்பத்தி முதலீடுகள் யாவும் இவர்களுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்படவேண்டும். இவ்வாறு செய்யின் இன்று வேலையற்று போதிய உழைப்பின்றி நசுக்கப்படும் 20 லட்சம் கிராமப் பாட்டாளிகளும் உற்பத்தியில் ஈடுபடுவர்.

+

வெளிவந்துவிட்டது!

**இலங்கையின்**

**தேசப்படப் புவியியல்**

பேராசிரியர் க. குலரத்தினம் அவர்களது முன்னுரையுடன் கூடியது

G. A. Q., க. பொ. த. உயர்தர, சாதாரண வகுப்புகளுக்கு மட்டுமன்றி கீழ்வகுப்புகளுக்கும் பயன்படத்தக்க உயர்ந்த நூல்.

விலை : 3-75

கிடைக்குமிடம்:

**விஜயலட்சுமி புத்தகசாலை**
248, காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-6.

தொலைபேசி 88930

**KUMARAN** 201, DAM STREET, COLOMBO-12.
இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அரசின் வெளிநாட்டுக் கொள்கையின் மாற்றம் கச்சதீவு அன்பளிப்பில நன்கு பிரதிபலிக்கிறது. கச்சதீவு ஒரு கற்பாறையல்ல என்ற சிறு கட்டுரை புதிய நிலையை விளக்குகிறது.

நாட்டை அபிவிருத்தி செய்ய மூலதனம் வேண்டும் என்ற குரல் முதலாளித்துவத்தின் குரலாகும். உழைக்கும் மக்களும் நாட்டின் இயற்கை வளமுமே மிகப் பெரிய மூலதனம் என்று கூறுகிறது மூலதனம் என்றால் என்ன? என்ற கட்டுரை.

திருகோணமலை எழுத்தாளர் மகாநாடு பற்றி ஆங்காங்கே திரித்த செய்திகள் வெளிவந்துள்ளன. திருகோணமலையில் வெடித்த தீப்பொறி அம்மகாநாட்டிற்கும் முற்போக்கு எழுத்தாளரின் இயக்கத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை அரசியலை முன்வைத்து தெளிவாக்குகிறது.

## குமரனின் குறிப்புகள்

அடிமை, நிலவுடைமையில் உற்பத்தி உறவுகள் நேரடியானவை. நீதியும் எஜமான், நிலப்பிரபுவால் நேரடியாக வழங்கப்பட்டது. முதலாளித்துவத்தில் உற்பத்தி உறவுகள் உற்பத்திப் பண்டங்கள் மூலம் ஏற்பட மூன்றாவது தரப்பாக நீதி மன்றங்கள் தோன்றின. சோஷலிசத்தில் மக்கள் ஜனநாயக உரிமை பெறுவது போல நீதி வழங்கும் உரிமையும் பெறுவர். வர்க்க சமுதாயத்திலகூட நீதி பரிபாலனம் மக்களிடை மதிப்பும் செல்வாக்கும் பெற்றதாக இருக்க வேண்டும். வர்க்க நீதியின் வரலாறு இன்றைய நீதி பரிபாலன மாற்றங்களுக்கும் பொருளாதார மாற்ற அடிப்படையைக் கொண்டு விளக்கம் தருகிறது.

நிலப் பிரபு இருந்த இடத்திற்கு அதிகாரிகள் ஆதிக்கம் பெற்று, நிலத்திற்கும் மக்களுக்கு மிடையில் முரண்பாடு ஏற்படுத்தி, உற்பத்தியைத் தேக்கமடையச் செய்கின்றனர். அத்தகைய முரண்பாடுகளை உடைக்க இயக்கங்கள் தோன்றுவதும் தவிர்க்க முடியாததாகும். கூட்டங்கள் குற்றவாளிகள் சிறு கதை இக்கருத்தைத் தொக்கி நிற்கிறது. பாராளுமன்ற கட்சிகள் பற்றிய இன்றைய அரசியலை அலசுகிறது. ஆராய்ச்சி சறுக்கு மரத்தில் ஏறுவது போன்றது; எல்லையற்ற வெறும் அபிப்பிராயங்களை மட்டும் கொண்டது. வர்க்க அரசியல் ஒன்றே சரியான பாதையைக் காட்ட வல்லது.

இந்த இதழிலிருந்து குமரன் விலையை 50 சதமாக உயர்த்த நேர்ந்தமைக்காக வருந்துகின்றோம்.

இப்பத்திரிகை கொழும்பு-12, 201, டாம் வீதியில் வசிக்கும் மீ. கணேசலிங்கன் அவர்களால், அதே முகவரியிலுள்ள குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
நிருவாக ஆசிரியர் : மீ. கணேசலிங்கன்.